பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 02 | திங்கட்கிழமை | (15-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 87

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# புலிகளில் இருந்து விலக முன்னர் கருணா ஜனாதிபதியுடன் தொடர்பு

## ஆங்கில வாரஇதழ் செய்தி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைமையில் இருந்து பிரிந்து செயற்படப் போவதாகக் கருணா அறிவிக்க முன்னர், அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவியுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிவீக்கப்படுகின்றது.

தான பிரிந்து செயற்படப் போவதாகக கருணா கடந்த மார்ச் 3ஆம் திகதி அன்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். ஆனால், அவர் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கருத்துப்பரிமாறங்களை மேற்கொண்டு வந்திருந்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிர வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதாவது கருணா, ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றும், இருவருக்கும் இடையில் கொழும்பு மாவட்ட முன்னணியின் வேட்பாளர் ரட்ண கமகே தகவல் பரிமாற்றத்திற்குத் தூதுவராகச் செயற்பட்டிருந்தார் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரட்ணகமகே கடந்த பெப்ரவரி 19ஆம் திகதியன்று கருணாவைச் சந்தித்திருந்தார் என்றும், 2மணி நேரம் இடம்பெற்ற இவர்களின் சந்திப்பின்போது கருணா ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் தனது விருப்பத்தை வெளியிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணாவின் முடிவுபற்றிக் கமகே, மங்கள சமரவீரவுக்கு அறிவித்திருந்தார் என்றும், ஆனால் இச்செய்தியை சமரவீர ஜனாதிபதிக்கோ அல்லது கதிர்காமருக்கோ அறிவிக்கவில்லை என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தனது கோரிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. முன்னணியின் ஆட்சியிலேயே புலிகள் தம்மைப் பலப்படுத்தினர்

## ஜனாதிபதி சந்திரிகா உரை

(நமது நிருபர்)

**ஐக்கியதேசிய முன்னணி அரசின் ஊழல் மிகுந்த நிர்வாகத்தின் காரணமாக நாடு அழிவுப்பாதையில் செல்வதைத் தடுப்பதற்காகவே மிகவும் மனவேதனையுடன் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு உத்தரவிட்டேன். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு நாட்டுமக்களுக்குத் தொலைக்காட்சிமூலம் ஆற்றிய விசேட உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அநத உரையில் அவர் மேலும தெரிவித்திருப்பதாவது,

கடந்த 4 வருடங்களில் மூன்றாவது தடவையாகப் பாராளுமன்றத் தேர்தலுக்கு உத்தரவிட்டுள்ளதையிட்டுக் கவலைப்படுகின்றேன். கடந்த இரண்டு வருடங்களாக முனயோசனைகளற்ற திட்டங்களினால் ஐக்கியதேசிய முன்னணி அரசு நாட்டையும், நாட்டு மக்களையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்சென்றது. இதனைத் தடுக்கும்முகமாகவே தான் மிகுந்த மனவேதனையுடன் பாராளுமன்றத்தைக் கலைத்தேன்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று கடந்த 2வருடகாலமாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றபோதும், அதனால் அரசாங்கம் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணவில்லை. கடந்த 2 வருட காலமாக அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வந்த போதும், விடுதலைப் புலிகள் அக்காலப்பகுதிகளில் தம்மை ஸ்திரமான முறையில் பலப்படுத்திக் கொண்டதுடன், கப்பல்கள்மூலம் ஆயுதங்களைக் கடத்திவந்துள்ளார்கள்.

இத்தகையதொரு அபாயகரமான சூழ்நிலையிலேயே நாட்டைக காப்பாற்றும் நோக்குடன் மூன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 20 பெண்கள் புலிகளிடம் தஞ்சம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி தமிழக அகதிமுகாமில் இருந்து இலங்கைக்குச சட்டவிரோதமாக அழைத்து வரப்பட்டு கடந்த 4மாதங்களாகக் கொழும்பு வத்தளைப் பகுதியிலும், கொழும்பு குணசிங்கபுரத்திலும் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான மேலும் 20 யுவதிகள் நேற்றுக்காலை தப்பிச்சென்று வவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## விழித்தெழுந்த சிப்பாய் சுட்டதில் சகசிப்பாய் மரணம்

### நள்ளிரவுவேளை யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காவல் கடமையிலிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சக சிப்பாய் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.55 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிவீதியும், கோவில் வீதியும் இணையும் சந்தியில் உள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)


விடியலுக்காய் சிந்திய குருதிகள்
என்றும் எம் நினைவிலே நிற்கும்
தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வை உறுதியாக்குவோம்.
வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான
சுயேச்சைக்குழு - 01
திரு.வீ.ஆனந்தசங்கரி
இல. 4

திரு.ச.அரவிந்தன்
இல. 2
(சி-7433)


வீணைக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?
ஈ.பி.டி.பியினர் ஆள்வதற்காக அல்ல!
மக்கள் வாழ்வதற்காகவே ஆகும்!!
வீணைக்கே உங்கள் வாக்குகள்!!!

X
(சி-7432)
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# அரசு அலுவலகத்தைக் கைப்பற்றிய பயங்கரவாதிகள் இருவரும் சுட்டுக்கொலை

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள மத்திய அரசின் பத்திரிகைத் தகவல் வாரியம் இயங்கிவந்த கட்டடத்திற்குள் குண்டுகளை வீசி அதனைக் கைப்பற்றிய அல்மன் சூரியன் பயங்கரவாதிகள் இருவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்,

ஸ்ரீநகரின் ரெசிடெண்சி சாலையில் பத்திரிகைத் தகவல் வாரிய (பி.ஐ.பி) அலுவலகம் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இரண்டு பயங்கரவாதிகள் கையெறி குண்டுகளை வீசியும், அங்கு பாதுகாப்பிற்கு நின்று கொண்டிருந்த சிறப்புப் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும் உள்ளே நுழைந்து அந்த அலுவலகத்தைக் கைப்பற்றினர்.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் இரண்டு பேர் காயமடைந்தனர். ஸ்ரீநகரில் குளிர்காலம் ஆதலால் ஆறு மாதங்களுக்கு இந்தக் கட்டடத்தில் பி.ஐ.பி.இயங்காத காரணத்தினால் அங்கு பணியாற்றுபவர் எவரும் இல்லை.


பி.ஜ.பி. அலுவலகம் கைப்பற்றப்பட்ட தகவல் அறிந்தவுடன் எல்லைப் பாதுகாப்புப் படையினரும், ஜமமு - காஷ்மீர் காவல்துறை யினரும், துணை இராணுவப் படையினரும் அதனை சுற்றி வளைத்தனர். அருகில இருந்த கட்டடங்களில் தங்கியிருந்த உள்ளூர், மற்ற மாநில சர்வதேச பத்திரிகை அமைப்புகளில பணியாற்றி வரும் அனைவரும் வெளியேற்றப்பட்ட பிறகு பயங்கரவாதிகளைக் குறிவைத்து பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர்.

இந்த துப்பாக்கிச் சண்டையில் அந்தக் கட்டடத்தில் ஒரு பகுதியில தீப்பிடித்தது. அங்கு சிக்கிக்கொண்ட பயங்கரவாதி ஒருவன் ஜன்னல் வழியாகக் குதிக்க முயன்றபோது பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். துப்பாக்கிக் குண்டு அவனுடைய உடலில் பாய்ந்ததும், அவன் கட்டியிருந்த வெடிபொருட்கள் வெடித்ததில் அந்தப் பயங்கரவாதியின் உடல் சுக்குநூறாகச் சிதறியது.

அதன் பிறகு மேலும் ஒரு மணி நேரம் நடந்த சண்டையில் மற்றொரு பயங்கரவாதியும் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து மோதல் முடிவுக்கு வந்தது. உள்ளே நுழைந்த பயங்கரவாதிகள் இருவரும் வெடி குண்டுகளை எங்காவது வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று இரவு முழுவதும் பாதுகாப்புப் படையினர் சோதனை நடத்தினர். (து)



சென்னை வந்துள்ள ஐரோப்பிய யூனியன் முதன்மைச் செயலர் பிரான் காய்ஸ் மஸோலி, ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோவை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார்.



ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து தெலுங்கானா பகுதியைப் பிரித்து தனி மாநிலமாக அறிவிக்கக் கோரி போராடி வரும் கே.சந்திரசேகர் ராவ், சென்னை வந்தார். அவர் தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்து தனது கோரிக்கைக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# அ.இ.அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை அனுப்புமாறு தேர்தல் ஆணையம் பணிப்பு

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பற்றி தனிப்பட்ட முறையில் அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் விமர்சனம் செய்திருப்பதன் மூலம் தேர்தல் நன்நடத்தை விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கொடுத்த புகாரையடுத்து தேர்தல் அறிக்கையை அனுப்புமாறு தேர்தல் ஆணையம் அ.இ.அ.தி.மு.க.வை கோரியுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் கிருஷ்ணமூர்த்தி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதைத் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரத்தின் போது சட்டவிதிகள் மீறப்பட்டதாகப் புகார்கள் வந்தால் அதன் மீது ஆணையம் நடவடிக்கை எடுக்குமென்று அவர் கூறினார்.

சென்னையில் வாக்காளர்களுக்கு தி.மு.க. எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கியதாக அ.இ.அ.தி.மு.க குற்றஞ்சாட்டியுள்ளது பற்றியும், சோனியா காந்தி பற்றிய அ.இ.அ.தி.மு.கவின் விமர்சனத்தை வன்முறை ஏற்படும்படி பயன்படுத்த காங்கிரஸ் முயல்கிறது என்று பா.ஜ.க.குற்றஞ்சாட்டியிருப்பது பற்றியும் தேர்தல் ஆணையரிடம் கேட்டபோது, தேர்தல பிரசாரத்தின் போது சட்டவிதிகள் பற்றிய புகார்களை மட்டுமே தேர்தல் ஆணையம் விசாரிக்கும் என்று தெரிவித்தார். (து)

# பாக். உடனான சமாதானப் பேச்சு தொடரும் என சோனியா அறிவிப்பு

(புதுடில்லி)

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால தேசிய ஜனநாயகக் கூட்டணி துவக்கியுள்ள பாகிஸ்தானுடனான சமரசப் பேச்சுவார்த்தை தொடரும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசிய சோனியா காந்தி, பிரதமர் வாஜ்பாயின் அமைதி முயற்சிகளை ஆரம்பம் முதலே தமது கட்சி ஆதரித்து வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

கூட்டணி அரசியல் நீண்ட காலத்துக்கு நீடிக்காது என்றும் மீண்டும் இரு கட்சி அரசியல்தான் ஏற்படும் என்றும் சோனியா காந்தி கூறினார். (து)


யாழ். மண்ணில் முதன் முறையாக வட்டுக்கோட்டையில்

புனிதபத்திரிசியார் கல்லூரி



மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட மாபெரும் துடுப்பெடுத்தாட்டம். ராஜன் கதிர்காமர் வெற்றிக்கேடயத்திற்கான வடக்கின் பொன் அணிகள் மோதல். மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்



யாழ்ப்பாணக் கல்லூரி

மோதவிருக்கும் அணிகள்.

யாழ்ப்பாணக்கல்லூரி எதிர் புனிதபத்திரிசியார் கல்லூரி

இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானம்

காலம்:- 18.03.2004 (வியாழக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம்

இவ் மாபெரும் துடுப்பெடுத்தாட்ட நிகழ்வில் தங்கள் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்பவற்றின் விளம்பரங்களை மைதானத்தில் மற்றும் ஊடகங்களில் விளம்பரம் செய்திட தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

❄ யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்

அல்லது

❄ T.K. TOURIST INN பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கங்கள்:- 077 6143541, 021-222-5680

(சி-7434) விண்ணப்ப முடிவுத்திகதி - 16.03.2004 (செவ்வாய்க்கிழமை)

# சிறிலங்கா அரசு செய்த பிரசாரத்தோடு ஒத்துப்போகும் கருணாவின் பிரசாரம்

**கனடாவிலிருந்து சுதர்மா எழுதிய "கிழக்கு நெருக்கடி– சமாதானத்தின் பரிசு" எனும் தலைப்பிலான கட்டுரை வலம்புரி வாசகர்களுக்காக இங்கே தரப்படுகிறது.**

அனைத்துலக செய்தி நிறுவனமான ரொய்ட்டர், இம் மாதம் முதலாம் திகதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளின் பின்னால் அணி சேர்ந்து விட்டார்கள். விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றுள்ள இந்த



அணியே இலங்கையின் அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கிறதொரு சக்தியாக அமையப் போகிறது. சமாதானப் பேச்சுக்கள் முறிவுற்றால், தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு கவனத்திலெடுக்காவிட்டால், தனிநாடு கோருவதையே மாற்றுவழியாக இக்கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளன எனத் தெரிவித்திருந்தது.

அதேபோன்று அன்றைய தினம் கரடியனாறு தேனகத்தில் இடம்பெற்ற புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களிற்கான வைபவத்தில் பேசிய கருணா, தற்போது எமக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் சிறந்த முறையில் உள்ளது. உலக நாடுகள் எங்கள் உன்னத போராட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து கொண்டுள்ளன. சர்வதேச சமூகம் சிங்கள இனத்தின் கொடிய முகத்தைப் பார்க்கக் கூடிய ஒரு வாய்ப்பாக எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் அமைந்திருக்கிறது. எனவே அனைத்து தமிழ் மக்களும் ஓர் அணியாகத் திரண்டு தமிழ்க் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அடுத்தநாளே இந்த அபிலாஷைகளிற்கு இலக்கு வைக்கப்பட்டதான செயற்பாடு தென்தமிழீழத்தில் வெளிப்பட்டது. குறிப்பாக கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பது போன்ற தோற்றத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்பாடு, அது தொடர்ந்து இடம்பெற்றுவரும் பாங்கு, ஏதோ ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றுவதற்காக கிழக்கிலங்கை வாழ் தமிழ் மக்கள் பலிக்கடாவாக்கப்படுகின்றார்களோ என்ற எண்ணத்தையே பெரும்பாலானவர்களிடம் ஏற்படுத்தியுள்ளது. மேலோட்டமாக தமிழர் தரப்பிடையேயான ஒரு கருத்துவேறுபாடு ஆரம்பித்த இம்முயற்சி இன்று தமிழர்களின் ஒற்றுமையைக் குறிவைத்து நகர்த்தப்படுகிறது.

## பிரதேசவாதப் பிரசாரங்கள்

"பிரதேசவாதத்தைக்"மையக் கருவாகக் கொண்ட மேற்படி செயற்பாடு, அதற்காக உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை முன்னிறுத்தியது. குறிப்பாக, இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் பரப்புரையாக கடந்த காலங்களில் அமைந்திருந்த ஒரு விடயமே "கிழக்கிலங்கைப் போராளிகள் அதிகளவில் பலியாகிறார்கள்" என்ற பிரசாரம். ஆனால் இப்பிரசாரமே எப்படி விடுதலையை நேசித்தவர்களால் விரும்பியேற்றுக் கொள்ளப்பட்டது என்ற கேள்வி இவ் விவகாரத்தில் அந்நிய சக்திகளின் பங்கு ஏதேனும் இருக்குமோ என்ற சந்தேகத்தை தோற்றுவிப்பது இயல்பே.

ஏனெனில், கிழக்கு மாகாணப் போராளிகள் வடக்கு மக்களிற்காக அநியாயமாகப் பலியாகிறார்கள் என்ற வகையிலான ஒரு பிரசாரத்தை, ஜெயசிக்குறு எதிர்ப்புச் சமர் மற்றும் ஓயாத அலைகள் - 3இன் போது இலங்கை அரசாங்கம் பெருமளவில் முடுக்கி விட்டிருந்தது. இலங்கைப் படைகள் இது தொடர்பான துண்டுப்பிரசுரங்களை கடந்த காலங்களில் கிழக்கில் விநியோகித்து வந்தன. இது போன்ற பிரசாரங்கள் முன்னரும் பல தடவைகள் அரங்கேற்றப்பட்டிருந்த போதும், ஓயாத அலைகளின் போதே இதற்கான முயற்சி முழு அளவில் முடுக்கிவிடப்பட்டது.

அதுபோன்றே, இந்திய ஆளும் வர்க்கம் சார்ந்த மற்றும் உளவுத்துறை சார்ந்த செயற்பாட்டாளர்கள் இவ்வாறான தூண்டுதலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக, தான் சந்திக்கிற கிழக்குபகுதி. சார்ந்தவர்களிடம் இதுபற்றிய தூண்டுதல்களை இந்தியா ஏற்படுத்தி வந்தது. கொழும்பைச் சேர்ந்த இராணுவ மற்றும் அரசியல் விமர்சகர் ஒருவர், தான் இந்தியப் பேராசிரியர் ஒருவரைச் சந்தித்த போது, கிழக்கு மாகாணப் போராளிகளே அதிகம் போரில் இறக்கிறார்கள் என்ற கருத்தை தன்னிடம் திணிக்க முயன்றது பற்றி தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக, இரண்டு அரசுகளால் தமிழர்களை கூறுபோட ஆயுதமாக எடுக்கப்பட்ட ஒரு விடயத்தை இப்போது தனித்துப் போயுள்ளவர்கள் தமது தேவைகளிற்காகப் பயன்படுத்தி வருவதனால், அந்நிய சக்திகளிற்கு மேற்படி நபர் விலை போய்விட்டார் என்ற சுட்டிக்காட்டுகை எழுவது இயல்பே. அதுகூட எந்தவித தேவையுமற்ற ஒரு சமாதான காலத்தில் அல்லது தமிழர்களின் ஒருமித்த பாராளுமன்ற பிரசன்னத்தை எதிர்பார்த்திருந்த ஒரு கட்டத்தில் இத்தகையதொரு மலினப் பிரசாரம் கிளப்பப்பட்டது இதற்கான சந்தேகத்தை ஒருபடி மேலே இட்டுச் சென்றுள்ளது.

## மாவீரர்களின் தியாகம்

குறிப்பாக, மேற்குறித்த இருமாவட்டங்களின் மாவீரர்களின் தொகையை மாத்திரம் கணக்கிலெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை எவ்வாறு விடுதலைக்காகப் போராடி வந்த ஒரு தளபதி உள்வாங்கினார் என்பது மர்மமாகவே உள்ளது. ஒட்டுமொத்தமாக சுமார் 18ஆயிரத்தை அண்மிக்கும் தொகையிலான மாவீரர்களின் தியாகமே இன்றைய வெற்றியென்பதை மறந்து, இவ்வாறு தரம்பிரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு, பிரதேசவாதத்தை அப்பகுதி மக்கள் மீதும், போராளிகள் மீதும் திணிப்பதற்காக அவர் காட்டிய வேகம் அவர் மீதான முற்றுமுழுதான நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தியது.

## சமாதானத்தைக் குலைக்கும் செயற்பாடுகள

தமிழ் மக்கள் இராஜதந்திர வெற்றிகளின் உச்சத்திற்குச் சென்று கொண்டிருக்கிற ஒரு கட்டத்தில் இவ்வாறு செயற்படுவதானது, தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் அல்ல என்ற தோற்றத்தை ஏற்படுத்தி சமாதானத்தைக் குலைக்க முயலும் செயற்பாட்டுடன் ஒருமித்தே இது காணப்படுகிறது. கடந்த காலத்தில் சில உதிரிகளினூடாக சமாதான எதிர்ப்பாளர்கள் அரங்கேற்ற முயன்ற "தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் அல்ல" என்ற விடயத்திற்கான ஒரு மேலதிக சேர்ப்பாகவே கருணா பயன்படுத்தப்படுகிறாரா என்ற சந்தேகமும் பலரிடையே ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தமிழர் தரப்பின் போராட்டத்தில் சுமார் இரண்டு தசாப்தங்களாக ஈடுபட்டு வந்த கருணாவிற்கு எவ்வாறு உள்ளகப் பிரச்சினைகளைக் கையாள்வது, தவறான முறையில் ஏதும் நடைபெற்றால் அதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்ன என்பது பற்றிய பட்டறிவும் அனுபவமும் மிக நிறையவே உண்டு. எனவே தான் பின்பற்ற வேண்டிய வழி ஏது என்று தெளிவாகத் தெரிந்த ஒருவர் அதைக் கடைப்பிடிக்காது தவறும் பட்சத்தில் அதற்கான தலைமைப்பீடத்தின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பது. கருணாவிற்குத் தெரியாத தொன்றாக இருக்க முடியாது.

## கருணாவின் நடவடிக்கைகள்

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தான் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டே இவ்வாறு நடந்து கொண்டார் என்றே தோன்றுகிறது. அதற்காகவே தலைமைப் பீடத்தை மதிக்காது அதற்கான மாற்றுத் தயாரிப்பாக ஊடக உலகிற்கு முன்னுக்குப் பின் மாறுபட்ட தக்வல்களை வழங்குதல், உண்மைகள் இல்லாத விடயங்களை அறிவித்தல் (உதாரணம்: கேணல் பதுமன் வன்னியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்) போன்ற செயற்பாடுகளைத் தொடர்ந்தார். எனவே தீர்வொன்றிற்கான சாத்தியத்தை இல்லாது செய்யும் செயற்பாட்டில் கருணா தன்னிறைவு பெற்றுள்ளார்.

குறிப்பாக "தமிழீழ விடுதலைப் புலிகள் போரொன்றிற்குத் தயாராகிறார்கள், அதனால் தான் ஆயிரம் போராளிகளை வன்னிக்கு அழைத்தார்கள்" என்ற கருணாவின் குற்றச்சாட்டு விடுதலை விரும்பியென்ற ஒரு வரையறைக்குள் கூட அவர் இனிப் பொருந்த முடியாதவர் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. தனது மனதிற்குத் தோன்றுவதையெல்லாம் உண்மையாக்க முயலும் கருணா, விடுதலைப் புலிகள் மீதான வெறுப்புணர்வை அதிகரிக்கும் செயற்பாடுகளையும், தனது செயற்பாடு கிழக்கு மாகாண மக்களின் மீதான அக்கறையின் வெளிப்பாடு போன்றதொரு தோற்றத்தையும் ஏற்படுத்த முயல்கின்றார்.

சமாதான காலத்தில் ஆயிரம் போராளிகளை வன்னிக்கு வரவழைப்பதற்கான தேவை தமிழர் தரப்பிற்கு இருந்திருக்காது. அப்படி தமிழர் தரப்பு அவ்வாறானதொரு அழைப்பை விடுத்திருந்தால், அது கருணாவின் தற்போதைய செயற்பாடு அடையாளம் காணப்பட்டு, அதனைத் தவிர்ப்பதற்காகவே இடம்பெற்றிருக்கலாம். எனவே தனது தவறான அணுகுமுறையை நியாயப்படுத்துவதற்காக, இலங்கைப் படையணிகள், முஸ்லிம் ஆயுதக் குழுக்கள், சிங்கள எல்லைக்காவற்படைகள், ஐந்தாம் படைகள் எனப் பல தரப்பட்ட இன்னல்களைச் சந்திக்கும் ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க கருணா முயல்வது அவரது




துரோகத்தனத்தின் உச்சம்.

சுமார் முப்பது வருடங்களிற்கு மேலாக வலுப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பை, சர்வதேச வலைப்பின்னலை, வழங்கல் பாதையையுடைய தமிழர் தரப்பின் செயற்பாட்டில் கருணாவின் நடவடிக்கைகள் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தாதென்பது கருணாவிற்குத் தெரியும். ஒரு புறத்தே தனக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை ஏற்க மறுக்கும் கருணா, மறுபுறத்தே ஒரு தன்னம்பிக்கை இழந்த மனிதனாக இருப்பதையே அவர் ஊடகங்களிற்கு வழங்கிநிற்கும் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

கருணா ஐரோப்பாவுக்குச் சென்றபோது, "தேசியத்தலைவர் மீதான பற்றுறுதி மற்றும் விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பு இவ்வளவிற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும்" என தான் எதிர்பார்க்கவில்லையென்றும், இவ்வாறான ஆதரவுப் புலத்தின் மத்தியில் விடுதலையை வென்றெடுப்பது இலகு என்றும் விடுதலையின் சாத்தியத்தை வியந்திருந்தார். ஆனால் இவ்வாறான கருத்துக்கூறலை மேற்கொண்டவரே, பல தடைகளைத் தாண்டி வெற்றி நடைபோடுகின்ற ஒரு விடுதலைப் போராட்டத்தில் கறைபடிய வைப்பதற்கு வழிவகுத்துவிட்டார்.

ஆக மொத்தம், சமாதான காலத்தின் பெறுபேறாக, ஈழத்தமிழினம் பாரிய விலை கொடுத்துப் பெற்ற கற்பிதமாக அமைந்துவிட்டது இன்றைய கிழக்குச் சம்பவம்.

## சமாதான நீதவானாகப் பதவியேற்பு



அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்நத ஜேசுதாஸன் உதயகுமார், அகில இலங்கைச் சமாதான நீதவானாக யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப பிரமாணம் செய்து கொண்டார்.

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாக்கொண்ட இவர், கொழும்பு மாநகர சபை, யாழ். மாநகரசபை ஆகியவற்றின் மத்திய சந்தைகளின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி இளைப்பாறியவராவார்.

அத்துடன், இவர் சிறந்த சமூக சேவையாளருமாவர்.

கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் இவர் என்பதும் குறிப்பிடத்தககது.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

73

## நான்காம் பகுதி

## முக்குவர் சட்டம்

## 1.மட்டக்களப்பு தேசம்

### மாகோனும் வன்னிமைகளும்

பின்பு சில நாளைக்குப்பின் மாகோனை அழைத்துச் சில நல்ல வசனம் பேசுவதற்காக அழகு சொறிந்த பந்தல் விதானங்கள் செய்து தோப்பாவை அரசு புரியும் மாகோனுக்கு ஒரு வரவுப் பத்திரம் அனுப்பிவிட்டான். மாகோனும் சுகதிரனுடைய பத்திரத்தைக் கண்டு மனமகிழ்ச்சி கொண்டு சிறு போர் முனை வீரரோடு பட்டத்து யானை மேல் ஏறி மட்டக்களப்பிற்கு வரச் சுகதிரனும் பிரதானிகளோடும் மட்டக்களப்புத் திக்கதிபரோடும் தானிய பந்தலில் சந்தித்து இருவரும் சுகதிரன் மாளிகையில் இருந்து மட்டக்களப்புச் சுக செல்வங்களைப் பேசி விருந்துண்டு மாகோன் எழுதினம் சுகதிரனிடமிருந்து தோப்பாவைக்குச் சென்றனன். பின்பு சுகதிரன் மட்டக்களப்பை மனுமுறையின் படி அரசு புரிந்து வரும் காலம் தனது மனைவி வயிற்றில் 6 புத்திரர் பிறந்தார்கள்... பின்பு மட்டக்களப்பை 4 பாகமாகிப் படையாட்சி குலத்தவருக்கு மண்முனை வடபகுதியும், காலிங்க புலத்தவருக்கு மண்முனைப் பகுதியும், வங்கர் குலத்தவருக்கு மட்டக்களப்பும் , சிங்கன் குலத்தவருக்கு உன்னரசபுரியும் நான்கு குலத்தவரும் 70 வருஷங்களாகச் சம்மதமுற்று ஆண்டு வந்தனர். பின்பு சிங்கன் குலத்தவர் மேலெழும்பி வங்கர் குலத்தவர்களைத் துணைக்கொண்டு விசயது வீபத்தை இலங்கை முற்றுக்கும் மத்திய தலமாக்கி மண்முனைக் களப்புக்கு வடக்கே கோறளை நகராக்கி வங்கர், சிங்கர் படையாட்சி மூன்று குலத்தவரையும் குகன் குலத்தவர் என திட்டஞ் செய்து மட்டக்களப்புக்குத் திக்கதிபராகத் திட்டஞ் செய்து ஆண்டனர். விசயதுவீபம் மத்திய நகரானவுடன் இலங்கை முற்றிலுமுள்ள நடு நீதிகளை மத்திய இராசதானத்திலே விளங்கிக் குற்றஞ் செய்தவரைக் கண்டிக்கும்படியாய் மட்டக்களப்புக் குடாநாடு, அனுராதபுரம், வதுளா, மண்ணாறு , காளி, அம்மான்தோடை, இரத்தின வல்லி நாடு, முள்ளுத்தீவு, தட்சணாபதி, கொட்டியனூர், தோப்பாவை, நூரெலியா இவ்வளவு நாட்டதிபர் சம்மதமுற்றுக் கைச்சாத்திட்டனர். அதற்காகச் சிங்கதுவீபம் என்பதை மாற்றிக் கண்டி நகரென்று அரசாண்டனர்"

சுகதிரன் பற்றிய கதையிலே மட்டக்களப்புத் தேசத்து வரலாற்றம்சங்கள் தொடர்பான பல செய்திகள் கலந்துள்ளன. அவை பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவை. ஒரு திட்டவட்டமான காலவரையறை முறை காணப்படாமையால் அவை வரன்முறை தடுமாறிய வண்ணமாயும் உள்ளன. ஆயினும் இக்கதையில் மூன்று பிரதான விடயங்களை அடையாளங் காணமுடிகின்றது. அவற்றுளொன்று மட்டக்களப்புடன் மாகோன் என்னுங் கலிங்கமாகன் கொண்டிருந்த தொடர்பு பற்றியது. இரண்டாவது அம்சம் மட்டக்களப்பு, மண்முனை, வடக்கு மண்முனை, உன்னரசகிரி என்று நான்கு பிரிவுகளாகப் பிராந்தியம் பிரிக்கப்பட்டு, அவற்றில் முக்குவர் குடிகளைச் சேர்ந்த தலைவர்கள் அதிபர்களாக நியமிக்கப் பெற்றமை பற்றியதாகும். மூன்றாவது அம்சம் கண்டி இராசதானியோடு மட்டக்களப்பு தேசத்து வன்னியர் கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றியதாகும். இவற்றுள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து விமர்சிப்பதாயின் கதை விஸ்தாரமாகும். கதையை நீடிப்பது இங்கு பொருத்தமற்றதாகும். எனவே இவற்றின் தாரதம்மியங்களை இங்கு மிகச் சுருக்கமாகவே அவதானிக்க முடியும். மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் மாகோன் ஒரு பிரதானமான மன்னனாகவே வர்ணிக் கப்படுகின்றான். மாகோன் கலிங்க தேசத்தால் வந்தவன் என்று சொல்லப்படுவதாலும் தோப்பாவையிலிருந்து அரசு புரிந்தவன் என்று சொல்லப்படுவதாலும் அவனைப் பாளி நூல்களும் சிங்கள நூல்களும் குறிப்பிடும் காலிங்கமாகனென்று அடையாளம் காணமுடிகின்றது.

காலிங்கமாகன் கி.பி.1215ஆம் ஆண்டளவிலே 24 ஆயிரம் கேரளருடன் படையெடுத்து வந்து, பொலநறுவை நகரைக் கைப்பற்றி, அங்கு அரசனாகவிருந்த பராக்கிரம பாண்டியனைச் சிறைப்படுத்திவிட்டு, நெடுங்காலம் இலங்கையின் வடபாகத்தை ஆட்சிபுரிந்தான். மன்னார், மாதோட்டம், பதவியா, குருந்தனூர், திருக்கோணம், கொட்டியாரம் முதலான இடங்களிலே அவன் படை நிலைகளை அமைத்திருந்தான். அவனுடைய படைபலம் காலப்போக்கில் மேலும் அதிகரித்தது. அது 44 ஆயிரம் ஆகப் பெருகிவிட்டது என்று சிலநூல்கள் கூறும். அவன் மிக வலிமையுடைய மன்னனாகவே விளங்கினான்.

பொலநறுவைக்காலத்தின் இறுதிக்கட்டமாக அவனுடைய ஆட்சி அமைந்தது. அவனது காலத்திற்குரியன என்று கொள்ளத்தக்க கலைச்சின்னங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அவனால் வெளியிடப்பட்ட சாசனங்களோ நாணயங்களோ இதுவரை காணப்படவில்லை. கலிங்கமாகன் கடைப்பிடித்த கொள்கைகள் பௌத்த சமயத்திற்கு விரோதமானவையென்றுஞ் சொல்லப்படுகின்றது. விகாரங்களுக்கும் கோயில்களுக்கும் உரிமையான உடைமைகளை அபகரித்து, அவற்றைப் படைகளுக்கு மாகன் வழங்கினான் என்று சூளவம்சம் முதலான நூல்கள் கூறுகின்றன. பௌத்த சமயம் தொடர்பான ஏட்டுச் சுவடிகளை அவனுடைய ஆதரவாளர் அழித்தனர் என்ற குற்றச்சாட்டும் உண்டு. சமயப்பூசலும் பகைமையும் மேலோங்கிய ஒருகாலத்தில் அவனுடைய படையெடுப்புகள் நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை. மாகனும் அவனுடைய ஆதரவாளரில் சிலரும் தக்கிணத்திலே 12ஆம் நூற்றாண்டில் உதயமாகிப் பரவிய வீரசைவக் கோட்பாடுகளினாற் கவரப்பட்டிருந்தனர் போலத் தெரிகின்றது. தக்கிணத்தில் வீரசைவர் சமணருக்கு விரோதமாகச் செயற்பட்டனர். இலங்கையில் மாகனும் அவனது ஆதரவாளர்கள் சிலரும் பௌத்த சமயத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டனர் . இலங்கையிலே மாகனது நெடுங்கால ஆட்சியின் விளைவாகத் தமிழரிடையே பௌத்த சமயம் முற்றாக வழக்கொழிந்து விட்டது போலத் தெரிகின்றது. அவர்களிடையே முற்காலத்தில் வழங்கிய பௌத்த சமய வழிபாட்டு முறையின் அடையாளமாகப் பத்தினி வழிபாடு மட்டுமே நிலை பெறலாயிற்று. மாகோனுடைய சமய நடவடிக்கைகள் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுவன கலிங்கமாகனைப் பற்றிப் பாளி நூல்களுஞ் சிங்கள நூல்களுங் கூறுவனவற்றில் இருந்து முரண்படவில்லை. மாகோனுடைய ஆதரவாளர் பௌத்த கோயில்களை இடித்தார்கள் என்றும் பௌத்த குருமாரையும் நாமதாரிகளான வைணவ அடியார்களையுந் துன்புறுத்தினார்கள் என்றும் இந்நூல் கூறுவது கவனித்தற்குரியது. மாகனுடைய ஆட்சிக்காலத்திலே மட்டக்களப்பிலே சமுதாய- பண்பாட்டு நிலைகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. மலையாள தேசத்து முக்குவர் உயர் பதவிகளையும் நிலமானியங்களையும் பெற்றனர். ஆட்சிமுறை, சமூக வழமைகள் என்பவற்றில் அவர்களின் செல்வாக்கு மேலோங்கியது. அதன் காரணமாக மருமக்கள் தாயமுறையினை அடிப்படையாகக் கொண்ட முக்குவர் வழமை தேசத்து வழமையாக அழுத்தம் பெற்றது.

மட்டக்களப்பு தேசம் தொடர்பாக மாகோனைப் பற்றி மகாவம்சம் ஒன்றும் கூறவில்லை. ஆயினும் மாகோன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றித் தமிழ் மரபில் நிலவி வந்துள்ள ஐதீகங்கள் கலிங்கமாகனைப் பற்றிச் சிங்கள, பாளி மொழி நூல்களில் உள்ள குறிப்புகளோடு ஒட்டிப்போகும் பான்மையில் உள்ளன. மண்முனையில் மாகோன் கோட்டையொன்றை அமைப்பித்து அதனைத் தனக்கு அனுசரணையாகவிருந்த அதிபனொருவனுக்கு வழங்கினான் என்ற குறிப்பு ஆதாரபூர்வமானதென்று ஒப்புக்கொள்ளக்கூடியவொன்றாகும். மட்டக்களப்பில் அதிகாரம் பெற்றிருந்த அதிபனொருவன் மாகோனுடைய மேலாட்சியினை ஒப்புக்கொண்டு அவனுக்கு ஆதரவு புரிந்தான் என்ற குறிப்பும் அத்தகைய ஒன்றாகும். (தொடரும்)

## தொடர்பு கொள்ளக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை அருகாமையில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேச குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

செல்லமணி பத்மாவதி 4ஆம் கட்டை அக்கராயன வீதி அமைதிபுரம்.

ஞானபண்டிதர் (தங்கராசா) மகேஸ்வரி கச்சாய் சாவகச்சேரி.

அய்யாத்துரை சுபாசினி நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு.

லிங்கராசா தமிழகம் ஏ.ஜி.ஏ. ஒழுங்கை வல்வெட்டித்துறை.

ப.வேலும் மயிலும் வல்வெட்டித்துறை.

அருள்நேசன் ரேணுகா சம்பியன் வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

வின்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ் கோவில் வீதி யாழ்ப்பாணம்.

விக்டர் அன்னமேரி 9,10 வீட்டுத்திட்டம் கடற்கரை வீதி குருநகர்.

தர்மலிங்கம் சரஸ்வதியம்மா அம்மன் கோவிலடி மண்டைதீவு.

கந்தப்பு பரம்சோதி தூத்தாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

சுப்பையா கனகரத்தினம் ஆவரங்கால் புத்தூர்.

முத்துத்தம்பி சோதிப்பிள்ளை மே/பா. வேலுப்பிள்ளை சிறுப்பிட்டி மத்தி நீர்வேலி.

மகேசன் நீதிமன்ற வீதி மல்லாகம்.

கஜராகவன் புளியடி வளவு பெரியகிணத்தடி அளவெட்டி.

நடராசா கந்தசாமி தங்கவேலாயுதம் சுப்பர்மடம் பருத்தித்துறை.

கந்தசாமி சின்னக்கிளி சல்லி வளவு பொலிகண்டி.

ஜெகதீஸ்வரன் லோஜி ஜி1 ஐந்து மாடிக் கட்டடம் குருநகர்.

அருணாசலம் இலங்கரத்தினம் யாழ். போதனாவைத்திய சாலை.

கந்தசாமி நாகராசா அந்தோனிவாசா பத்திமா வீதி மாதகல்.

பரமநாதர் குணசேகரம் 85,மணிக கூட்டுவீதி யாழ்ப்பாணம்.

சிவகுரு காசிநாதர் புகையிரத நிலைய வீதி சுன்னாகம்.

ஐயாத்துரை சுகந்தினி சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம், தெற்கு.

மாணிக்கம் மதுரநாயகம் இணுவில், மேற்கு இணுவில்.

பெனடிக் மரியதாஸ் 70/9 சொலமன் வீதி யாழ்ப்பாணம்.

விவேகானந்தராசா கிருஷ்ணகுமார் ஜீவன்ஸ் இல்லம் பன்னையம் பதி பருத்தித்துறை.

ராஜ்குமார் ராஜேஸ்வரி 387/1 நாவலர் வீதி நல்லூர். (தி)

## வட-கிழக்கு அபிவிருத்திகளுக்கு ஜி.ரி.சற்றின் பங்களிப்பு தொடரும் பணிப்பாளர் உறுதி

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கில் மேற் கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் பங்களிப்புத் தொடருமென இந்நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து வடக்கு-கிழக்குப பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிப் பேச்சு நடத்தினார்.

பேச்சுவார்த்தைகளின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய போதே அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகள் புத்துயிர் பெறவேண்டும். இதற்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நாம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம். இவ அபிவிருத்தித் திட்டங்கள் முதறகட்டமாக யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடை முறைப்படுத்தப்படும் இதற்குரிய பயனாளிகள் தெரிவு தற்பொழுது இடம பெற்றுவருவதாக அவர் மேலும் தெரித் தார். (து-35)

## புனர்வாழ்வு நிலையத்தில் 11 சிறுவர்கள் ஒப்படைப்பு

பொய்யான தகவல்களைக் காட்டிப் புலிகள் இயக்கத்தில் இணைந்த பதினொரு சிறுவர்கள் நேற்று முன்தினம் அவர்களிற்கான புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தினால், இயக்கத்தில் இணைந்த வயது குறைந்தோர் தொடர்பாக ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட விசேட குழுவின் தலைவரான கந்தம்மானே இவர்களைப் புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

இப்புனர்வாழ்வு நிலையம், யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் மீண்டும் பெற்றோர்களுடன் இணைவதற்கும், கல்வி கற்பதற்கும், தமது வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குமான பயிற்சிகள் இங்கே வழங்கப்படவுள்ளன. (தி)

## தீவகத்தில் கட்சிகள் பிரசாரம்

(வேலணை)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள தீவகத்தில் சூடு பிடித்துள்ளன. தமிழக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பொதுக் கூட்டங்களை நடத்தி தமது பிரசாரப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதே வேளை ஈ.பி.டி.பியினர் வாகனங்களில் சென்று ஒலிபெருக்கி மூலம் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (தி-47)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### அ.கந்தசாமி J.P

இவர் கோண்டாவில் கிராம முன்னேற்ற சங்க உபதலைவரும் விளையாட்டு காரியதரசியாகவும் இ.மு.கழக முன்னாள் தலைவராகவும் விளையாட்டு வீரனாகவும் நாடக நடிகராகவும் சமூக தொண்டனாகவும் யா/கோப்பாய் மகாவித்தியாலய பழைய மாணவனாகிய அரிய குட்டி- கந்தசாமி அவர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றத்தால சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு அவரை நாம் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
விஸ்வலிங்கம் அனந்தன் ,
கோண்டாவில்.

(8444)

# மீண்டும் யுத்தம் வேண்டாம் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு

## ஆபி. தே.கா.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவிப்பு

(கேப்டவுன்)

**இலங்கையின் அரசியலில் அண்மைக் காலமாக முரண்பாடுகளும் பிளவுகளும் ஏற்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.**

**தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் தமக்கிடையே பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், தற்போது தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்க அமைப்பினுள்ளும் விரிசல்கள் தோன்றியுள்ளன. இந்நிலையில், தென்னிலங்கை அரசியல் கட்சிகள் இரண்டும் கருத்து முரண்பாடுகளைக்களைநது ஒன்றிணையும் போதே இலங்கையின் சமாதான முயற்சிகள் மீண்டும் ஓர் புத்துயிர் பெறும் எனத் தென்னாபிரிக்க துணை ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும், ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான இப்ராகிம் தெரிவித்துள்ளார்.**

"இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள்" தொடர்பாக கேப்டவுனில் வைத்து சர்வதேச செய்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் சமாதான முயற்சிகள் தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ளன. சமாதான முயற்சிகள் அங்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டுமானால், தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சித் தலைவர்களான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

### விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு

இலங்கையில் மீண்டும் ஓர் யுத்தம் வேண்டாம் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும். விடுதலைப்புலிகளின் உயர் மட்டக் குழுவினரின் தென்னாபிரிக்க விஜயத்தின்போது, அவர்கள் என்னையும் சநதித்து அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்கள்.

இச் சந்திப்பின்போது, "தாம் மீண்டும் ஒரு யுத்தததில் ஈடுபடப் போவதில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமது அமைப்புக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை விதிகளை மீறிச் செயற்படமாட்டோம் எனறும் அவ் உடன்படிக்கையை முற்றுமுழுதாக அனுசரித்துச் செயற்படுவதில் தாம் உறுதியாக இருப்பதாகவும்" புலிகளின உறுப்பினர்கள் தெளிவாகத தெரிவித்திருந்தனர்.

ஆனால், தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில், தமக்கிடையிலான காழ்ப்புணர்ச்சிகளினால் நாட்டின் சமாதானத்தையும், மக்களின் அபிலாஷைகளையும் மதிக்காமல செயற்பட்டுவருவதைக் காணமுடிகிறது. இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறும் சாத்தியம் உண்டு.

இதுவிடயத்தில் தென்னிலங்கை புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்போதே இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை விரைவில் உருவாக்கமுடியும்.

### திடீர் தேர்தல்

இலங்கையின் பாராளுமன்றத் திற்காகத் திடீா தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது அரசியல் குழப்ப நிலைகள் ஏற்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரலில் தேர்தல் நடைபெற்று முடிவுற்றதைத் தொடர்ந்தே இவ் அரசியல் குழப்பங்கள் மறைந்து நாடு ஸ்திரத்தன்மை பெறும்.

இலங்கையின் சமாதானத்தின் தலைவிதியை நிர்ணயிககின்ற இந்தப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் முடிவுகள் பல்வேறு தரப்பினராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தேர்தலின் பின்னா நாடு வழமைக்குத் திருமபிவிடும் என்பதில் ஐயமில்லை.

### நோர்வேயின் பங்கு

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராகச் செயற்பட்ட நீண்ட கால அனுபவமும் சாதுர்யமும் நோர்வே நாட்டுக்கு உண்டு. தற்போதும் அவ்வாறே செயற்பட்டு வருகின்றனர்.

ஆயினும், விடுதலைப்புலிகள் இயக்கத்தினுள் தற்போது தோன்றியுள்ள உள்வீட்டுப் பிரச்சினைகளால் நோர்வேயின் சமாதான முயற்சிகளில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படும். தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது பாரிய சிக்கல்கள் தோன்றும் நிலை உருவாகும்.

### இந்தியாவின் பங்கு

இலங்கையின் அயல்நாடு என்ற ரீதியில், இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்க முடியும் ஆயினும், இலங்கையின் விடயத்தில் இந்தியா தலையிடுவதற்கு இலங்கையிலுள்ள அனைதது் தரப்பினரதும் சம்மதம் கிடைக்க வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்பது குறித்து விடுதலைப்புலிகளோ அன்றி தமிழ் மக்களோ சந்தேகம் கொண்டிருப்பார்களேயானால், இவ்விடயம சாத்தியமற்றதாகிவிடும்.

### சமாதானத் திற்கான வழி

எனினும், நாட்டில் நிரந்தர சமாதானம் ஒனறை உருவாக்கி சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கு அனைவரும் தமக்கிடையிலான கட்சி, மத, இன வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். இதுவே மிகவும் அவசியமானதொன்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(து.18)

---

## சட்டவிரோத கருக்கலைப்பில் மாணவிகளும் ஈடுபாடு

### வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டு

(சுதுமலை)

கருக்கலைப்புச் செய்வது சட்டவிரோதமானதொரு விடயமாக இருக்கின்றது. இதில் இலங்கையில் மாணவிகளே அதிகம் ஈடுபட்டு வருவதாக சுகாதாரப் போஷாக்கு நலநோம்பு அமைசசின் திட்டமிடல் வைத்திய அதிகாரி கே.முரளி தெரிவித்துள்ளார்.

அண்மையில் மானிப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுடனான முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கருக்கலைப்புச் செய்வது சட்டவிரோதமான செயல் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் கருக்கலைப்புச் செயவோரின் தொகை அதிகரித்து வருவதைப் புள்ளி விபரங்கள் மூலம் அறியமுடிகிறது.

இத்தகைய கருக்கலைப்புகள் கிராமப் புறங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கு அங்கீகாரம் பெறாத வைத்தியர்கள், பரம்பரை வைத்தியர்கள் ஆகியோர் துணைபோகின்றனர். இச்சட்டவிரோதச் செயலுக்காகப் பெருந்தொகைப் பணத்தை இவர்கள் அறவிடுகின்றனர்.

பெண்களின தாய்மைக்கும் உடல் ஆரோக்கியத்திறகும் பங்கம் விளைவிக்கும் இக் கருக்கலைப்புகளில் திருமணமானவர்களே அதிகம் ஈடுபடுகின்றபோதும், திருமணமாகாத இளையவர்கள் மற்றும் மாணவிகளிடையேயும் இப்பழக்கம் சுமாராக இருந்துவருகின்றது.

எனவே இத்தகைய நடவடிக்கைகளில் இளம் பெண்கள் ஈடுபடுவதைத் தடுக்க விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேணடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி-252)

---

## சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவர்கள் மீது குறிப்பிட்ட சில பொலிஸார் அவமதிக்கும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள் எனத் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிறேம ஜயந்த,மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மகஜன எஸ்க்ஸ பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டை ஏறறுக் கொண்ட தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் றஞ்சித் அபயசூரிய இது தொடர்பாக இன்னும் ஒருவார காலத்துக்குள் விசாரணைகள் மேற் கொள்ளப்படும் என உறுதியளித்தார். (தி-60,10)

---

## அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறை மூத்த உறுப்பினர் கரிகாலன் ஆகியோர் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் சமகால அரசியல் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளனர்.

(தி)

---

## அனுராவின் கருத்தை ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால், நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும் என கடந்த வெள்ளிக்கிழமை இரவு வர்த்தக சங்கத்தினா மத்தியில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் புதிய சுதந்திர முன்னணி சார்பில் தான போட்டியிடபோவதாக தனது சகோதரன் அனுராபண்டாரநயாக்க தெரிவித்த கருத்தையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

தனது சகோதரன் அனுராபண்டாரநாயக்கவின் கருத்துப்பற்றி மேலும் கூறிய ஜனாதிபதி, அனுரா தெரிவித்த கருத்துக்கள் பயனற்றவை. நாம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு எமது அரசாங்கம் அரசியல் அமைப்பு சபை ஒன்றை உருவாக்கும். இதற்கென கருத்துக்கணிப்பு ஒன்று நடாத்தப்பட்டு மக்களின் ஆணை பெறப்படும். அதன்பின்னர் அது உயர் நீதிமன்றத்தின் இறுதி முடிவுக்கு விடப்படும் ஆனால் இதற்கு தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை.

மேலும் தான ஜே.வி.பியினருக்கு பாராட்டுகளைத் தெரிவிப்பதாகவும், ஏனெனில் அவர்கள் தற்போது பொ.ஐ.மு, ஐ.தே.க.கட்சிகளை விடவும் கூடுதலாக ஜனநாயக வாதிகளாகச் சீர்திருத்தப்பட்ட கட்சி என்றார். (தி-6)

---

## வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி பூர்த்தி

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இதுவரை 21மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 14மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு அநதந்த மாவட்டங்களுக்கான தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய மாவட்டங்களக்கான வாக்குச் சீட்டுக்கள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் அவ்வவ் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார்.(தி-61,10)

---

## புகைத்தலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்

(தொல்புரம்)

போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பொருட்கள் பாவனையை எதிர்த்து மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.00மணிவரை சித்தன்கேணி மகா கணபதிபபிள்ளையார் ஆலய வீதியில நடைபெறவுள்ள இப் போராட்டத்தை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆரம்பித்து வைத்தார்.

போதைப்பொருட்கள் மற்றும் புகைத்தல் பொருட்கள் பாவனையால் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் சமூகத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதத்திலும் வடபிரதேச நல்லொழுக்க சம் மேளனத்தால் இவ் உண்ணாவிர தப் போராட்டம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அபேட்சகர்களான ந.ரவிராஜ், எஸ்.சிவமகாராஜா, சங்கானை அர சியல்துறைப் பொறுப்பாளர் அன்பு உட்பட பலா் இப்போராட்டத்தில கலந்துகொள்ளவுள்ளனர்.(தி-70)

# பிக்குகள் தேர்தலில் போட்டியிட்டால் அது அழிவில்தான் முடிவடையும்

## பீடாதிபதிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது பௌத்த பீடத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதாகவே அமையும் என்று மல்வத்தை அஸகிரிய பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

பிக்குமார் சம்மேளனம் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அஸ்கிரிய, மலவத்த பீடாதிபதிகள் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இம்மாநாடு நடைபெறுவதற்கு முனபு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில இருந்து 3 பௌத்த சங்கததைச சேர்ந்த பௌத்த பிக்குகள் பண்டாரநாயக்கா சாவதேச மாநாட்டு மண்டபம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்வது பிக்குகளின் வேலை அல்ல.

மககள் மத்தியில் சென்று அவர்களை நல்வழிப்படுத்தவேண்டியதே அவர்களது கடமை. இதனால் எந்தப பிரச்சினையும் நாட்டில் தோன்றாது என்று பௌத்த பிக்குகள் இம்மகாநாட்டில் சுட்டிக்காட்டினர்.

இம்மாநாட்டின் இறுதியில் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளின் கூட்டறிக்கையும் ராமாஞய பீட மகா நாயக்கரின் அறிக்கையும் வெளியிடப்பட்டன. (ம)

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

மனித அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சினால், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் 2 வருட ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைத் தொடர்வதற்காக உரிய நியமனம் பெற்று மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் ஆனுமதிக்கப்பட்டு அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற பயிற்றப்படாத தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாணக்கல்விப்பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட, அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ள தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இப் பாடநெறிக்காக விண்ணப்பிக்கவுள்ள யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்கள் 'அதிபர், 'ஆசிரிய கல்லூரி, கோப்பாய்' எனும் முகவரிக்கும், தமிழ் மொழி மூலம் விண்ணப்பிக்கவுள்ள மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்கள் 'அதிபர், அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு' எனும் முகவாக்கும், மன்னார், கிளிநொசசி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்கள் 'பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா' எனும முகவரிக்கும் தமது விணணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன், மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள சகல தமிழ்மொழி மூல, சிங்கள மொழிமூல விண்ணபபங்களும, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் ஆங்கில பாடநெறிக்குரிய விண்ணப்பங்களும் 'பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகக்கிளை, மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, இசுருபாய, பத்திரமுல்ல' எனும் முகவரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-18)

## பஸ் சீரில்லை

(வேலணை)

மாதகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் 787 ஆம இலக்க சாலை வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ்வண்டி கடந்த 2 கிழமைகளாக தனது சேவையினை நடத்தவில்லை.

இதனால், பாடசாலைக்கு செல்லும் மாணவர்க்கும் அரசநிறுவனங்கள் மறறும் தனியார் நிறுவனங்களுக்கு செல்வோரும் தனியார் சிற்றூர்திகளிலே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பருவகாலச் சீட்டை மட்டும் நம்பி மேற்படி நிறுவனங்களுக்கு செல்வோர் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருவதாக பயணிகள் குறைப்படுகின்ற னர். (தி-47)

# கூட்டுறவு பாதுகாப்பு அமைப்பு நாளைமுதல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையப் பாதுகாப்பு அமைப்பு இன்று திங்கட்கிழமை முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஊழியர்களின வேலைக்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் எனத் தாம் விடுத்த வேண்டுகோளை அரசு ஏற்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள இந்த அமைப்பு தமது நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஓர் அரச நிறுவனமாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கவிற்கு அனுபபியுள்ள கடிதத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையப் பாதுகாப்புஅமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (து-60,10)

# சுதந்திர தேர்தல் ஆணைக்குழு இன்னமும் அமைக்கப்படவில்லை

(கொழும்பு)


பொதுத் தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் வேளையில் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு இன்னமும் அமைக்கப்படவில்லை.

இதனால் அரசியல் கட்சிகள் எவ்விதமான ஒழுக்கக் கோவைகளையும் கடைப்பிடிக்காமல் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன என்பதுடன் தமது சுயவிருப்பின்பேரில் கட்சிகள் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளன.

சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு ஒன்றை அமைபபது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறு ஆணைக்குழுவை அமைப்பதில் ஜனாதிபதி காசனை காட்டாது இருப்பது ஏன்? என தற்போது கேள்விகள் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (தி-63)







யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடாத்திய பெண்கள் தின விழாவின்போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.தமிழினி ஆகியோர் உரையாற்றுவதையும், அதில் கலந்துகொண்ட ச்பையினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- ஐங்கரன்)

# மீண்டுமோர் யுத்தத்தை சந்திக்கும் மனோநிலையில் படையினர் இல்லை

(கொழும்பு)

மீண்டும் ஒரு யுத்தம் மூண்டால் அதனை எதிர்த்துப் போராடும் மனோநிலையில் பாதுகாப்புப் படையினர் இல்லையென முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரலும், ஐக்கிய தேசிய முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் இராணுவ உயர் அதிகாரி என்ற வகையிலேயே நான் இந்தக் கருத்தை வெளியிடுகின்றேன்.

முனனாள்பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருந்த ரத்வத்தை "ஜயசிக்குறு" என்ற பெயரில் 3 வருடங்களாக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கடற்படையினரையும் விமானப் படையினரையும் காட்டில் போரிடச் செய்து யுத்தத்தைக் கேலிக் கூத்தாக்கியமை காரணமாகவே 72 மணித்தியால காலப் பகுதிக்குள் மீண்டும் இராணுவத்தை ஓமந்தை வரை பின்வாங்கச் செய்தார்கள்.

அது மட்டுமன்றி, இன்று ஜனநாயகம் பற்றிப் பேசும் மக்கள் விடுதலை முன்னணியினர் 1988, 1989ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 551 பேரையும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 162 பேரையும் கொடூரமாகக் கொலை செய்து தமது இரத்த வெறியைத் தீர்த்துக் கொண்டார்கள். அதுமட்டுமன்றி, மக்கள் விடுதலை முன்னணியினர் தாம் சம்பளம் பெறுவதில்லை எனக் கூறிவருவதை மக்கள் எவரும் நம்பக் கூடாது.

ஏனெனில் அவர்கள் இலங்கை மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட கோடிககணக்கான தங்கத்தை விற்று பணத்தை வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் வைப்பிலிடடுள்ளார்கள்.

இதனால் கிடைக்கும் வட்டி மூலம் அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை நடத்துகின்றார்கள் எனத் தெரிவித்தார். (து-61,10)




யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவில், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சைவப் புலவர் வ.கந்தசாமியையும், அருகில் பாடசாலையின் அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



சமுர்த்தி அதிகாரசபையின் சந்தைப்படுத்தற் பிரிவினரால் அண்மையில் பயனாளி ஒருவருக்கு கடன் அடிப்படையில் நடமாடும் விற்பனை வண்டி வழங்கப்பட்டது. இதனைப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, ஜே/485 கிராம அலுவலர் பிரிவிலுள்ள செல்லன் சின்னராசா என்பவருக்குக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-பா.மணிக்குமார்)

# நியூஸிலாந்து தென்னாபிரிக்க டெஸ்ட் சமநிலையில் முடிவு

நியூஸிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையில்



நியூஸிலாந்தின் ஹமிடலீடன் நகரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 139.2ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும்- இழந்து, 459ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் 92 ஓட்டங்களையும் றூடொல்வ் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணிசார்பில் டானியல் விக்டோரி 158ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும், ஜேக்கப் ஓரம் 76ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும், ஸ்கொட் சைாஸ் 46ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும் வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, அதன் முதலாவது இன்னிங்ஸில் 164.4ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 509 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜேககப் ஓரம் ஆட்டமிழக்காமல் 218 பந்துகளில் 119 ஓட்டங்களையும் ஸ்கொட் சைரிஸ் 74 ஓட்டங்கைளயும், பப்ஸ் 59ஓட்டங்களையும், டானியல் விக்டோரி 53ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணிசார்பில் ஷோன் பொலக் 4 விக்கெற்றினையும், கலிஸ் 3விக்கெற்றினையும், அடம்ஸ் 2 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

2ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி 116.1ஓவர்களில் 4 விக்கெற்றினை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டதாக அறிவித்தனர். அதன்படி தென்னாபிரிக்க அணிசார்பில் துடுப்பாட்டத்தில ஜக்கலிஸ் 312பந்துகளை எதிர்கொண்டு 150ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதுடன், கிப்ஸ் 47ஓட்டங்களையும் பெற்றார்.

பந்துவீச்சில் வைமன்ஸ் 2விக்கெற்றினையும் ரொ.்.பி, ஹறின்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றுக்களையும் நியூஸிலாந்து அணி சாாபாக வீழ்த்தினார். போட்டியின் இறுதிநாள் முடிவின் போது நியூஸிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 16 ஓவர்களில் ஒரு விக்கெற்றினை இழந்து 39ஓட்டங்களைப் பெற்றது. இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

ஸ்கோர் விபரம்

* முதல் இன்னிங்ஸ்-தென்னாபிரிக்க அணி 459 (139.2ஓவர்கள்)

நியூஸிலாந்து அணி 509 (164.4 ஓவர்கள்)

* இரண்டாவது இன்னிங்ஸ்-தென்னாபிரிக்க அணி 313/4(116.1ஓவர்கள் **DRCLARED**

நியூஸிலாந்து அணி 39/1 (16.0ஓவர்கள்). (தி-121)

# குத்துச்சண்டையில் மீண்டும் மைக்டைசன்

உலகின் முன்னாள் குத்துச்சண்டைச் சம்பியனான மைக்டைஸன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் போட்டியொன்றில் பங்குபற்றவுள்ளார்.

இந்தப் போடடியில் ரஷ்ய வீரா ஒருவருடன் இவர் மோதவுள்ளார். இதற்காக மைக்டைஸனுக்கு 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப் போட்டிக்கு முன்பாக ஊக்குவிப்பு நடவடிக்கை களுக்காக எதிர்வரும் யூன்மாதம் இவா சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

அங்கு சீன வீரர்களுக்கான பயிற்சி முகாம்கள், சுற்றுலா, நல நிதியப்பணிகள் ஆகியவற்றிலும் டைஸன் கலந்துகொள்வார் என சீனப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் மைக்கடைஸனுக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கின்றனர். இதற்குக் காரணம் டைஸனின் குத்துச்சண்டை மாத்திரமல்ல, சீனாவில் முன்னாள் அதிபர் மாவோ சேதுங்கின் உருவத்தை டைஸன் தனது கையில் பச்சை குத்தியிருப்பதும் ஒரு காரணமாகும. 37வயதான டைஸன் ஒரு வருடத்திற்கு முன்னர் கடைசியாக குத்துச்சண்டைப் போட்டியில் பங்குபற்றினார். இப் போட்டியில் டைஸனுடன் மோதிய கிளபர்ட் எட்டைன் என்பவர் 49செக்கன்களில் டைஸனிடம் தோல்வி கண்டார். தற்போது டைஸன் பெரும் நிதி நெருக்கடியில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி-121)

# றோயல்-தோமஸ் கிரிக்கெற் போட்டி

## சமநிலையுடன் முடிவுற்றது

கொழும்பு றோயல் கல்லூரி அணிக்கும், கல்கிசை புனித தோமஸ அணிக்கும் இடையிலான 125வது வருடாந்த கிரிக்கெற் சுற்றுப்போட்டி வெற்றி,தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது. இலங்கையின் கல்லூரி அணிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெற் போட்டிகளில் மிகப் பழமைவாய்நத போட்டி நிகழ்வான இவ்விரு கல்லூரி அணிகளுக்குமிடையில் நடைபெறும் இப்போட்டி மாத்திரமே 3 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியாக நடைபெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு எஸ்.எஸ்.சி.மைதானத்தில் ஆரம்பமான இப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதற்கமைய அணி தமது முதல் இன்னிங்ஸில் 6விக்கெற் இழப்பிற்கு 294ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தமது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்கிசை புனிததோமஸ் கல்லூரி அணி 7 விக்கெற் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்று தமது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டு, றோயல் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதற்கமைய கொழும்பு றோயல் கல்லூரி அணி 9விக்கெற் இழப்பிற்கு 204ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டு தமது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

254 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு தமது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடர்ந்த கல்கிசை புனித தோமஸ் கல்லூரி அணியின் பொறுப்பற்ற ஆட்ட முறைமை காரணமாக 81ஓட்டங்களுக்கு 6விக்கெற்றுக்களை இழந்து பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனினும் போட்டியைத் தொடர்ந்து நடாத்துவதற்கு மைதானத்தில போதிய வெளிச்சமின்மை காரணமாகப் போட்டியை முடிவிற்கு கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இவ்விரு கல்லூரி அணிகளுக்குமிடையிலான 125ஆவது வருடாந்த கிரிக்கெற் சுற்றுப்போட்டி வெறறி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இப் போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவாகள் போட்டியை நேரில் கண்டுகளிப்பதற்காக மைதானத்திற்கு வருகை தந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

## கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச மட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான விசேட கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை மு.ப.11மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

2004ம் ஆண்டு பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி தொடர்பாகவும், ஏனைய பிரதேச மட்ட விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு ஒவ்வொரு கழகத்தினைச் சேர்ந்த தலைவர், செயலாளர் உட்பட 5பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எஸ்செல்வநாயகம் அறிவித்துள்ளார். (தி-68)

# இங்கிலாந்து முதல்இன்னிங்ஸில் 339 ஓட்டங்களைப் பெற்றது

மேற்கிந்திய தீவுகளிற்கான கிரிக்கெற் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான முதலாவது டெஸட் கிரிக்கெற் போட்டி தற்போது ஜமுக்காவில் விலுள்ள சபீனா பர்ர்க் விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இப் போடடியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தமது முதல் இன்னிங்ஸில் 311ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 339ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் மார்க்புஸ்ஸர் 58ஓட்டங்களையும், நஸார் உஸைியின் 58ஓட்டங்களையும் அன்ரூ பிளிங் ஒவ் 46ஓட்டங்களையும், அஸ்லி ஜெயில்ஸ் 28ஒடடங்கயையம் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணிசார்பில் பிடெல் எட்வேட், வெட்ஸ் ஆகியோர் தலா 3விக்கெற்றுக்களையும், சாங்வுட், ஹேயில் ஹயிலி மூவரும் தலா ஒரு விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் வேடன் ஸ்மித் 108ஓட்டங்களைப் பெற்றுக்கொடுததிருந்த அதேவேளை, ரெயான் ஹையின்ஸ் 84ஓட்டங்களையும், ரிஸ்லி ஜோக்கப் 38ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இதில் 5வது விக்கெற்றிற்கு இணைப்பாட்டமாக ரெயான் ஹைபின்ஸ் மற்றும் டேவன் ஸ்மித் ஆகியோர் 122 ஓட்டங்களைப பெற்றுக் கொடுத்து தமது அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச்சென்றனர். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் மத்தியு ஹோகாட், ஸ்ரிவ் கமீஸன், சைமன் ஜோன்ஸ் மற்றும் அஸ்லி ஜெயில்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தனர். (தி-68,121)

## இந்தியா-பாகிஸ்தான் முதலாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டி



இந்திய -பாகிஸ்தான் போட்டி தொடங்கும் முன் கைகுலுக்கும் இந்திய- பாகிஸ்தான் அணித் தலைவர்கள்.



நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணிக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரியங்கா காந்தி (நடுவில), கணவர் ராபர்ட் வதேரா (இடது), சகோதரர் ராகுல் காந்தி (வலது)




மொய்கானின் விக்கெற்றை வீழ்த்திய வெற்றிக்கழிப்பில் ஆஸிஸ் நேஹ்ரா அணியினருடன்.




இந்தியா சாாபாக 79ஓட்டங்களைப் பெற்ற வீரேந்திர ஷேவாக் வோல்ட முறையில் ஆட்டமிழக்கும் காட்சி.



இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெற் போட்டியில் சதத்தினைப்பெற்ற இன்ஸமாம்-உல்-ஹக்.



நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் 99 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த ராகுல் ட்ராவிட் பந்தினை விளாசும் காட்சி.



ஷோயப் அடித்த பந்தினை பிடி எடுக்கும் இந்திய அணியின் முஹமட் கைவ்.



இந்தியாவுக்கு எதிராக 122ஓட்டங்களைப் பெற்ற இன்சமாமின் விக்கெற்றினை வீழ்த்திய முரளி கார்த்திக், விக்கெற் காப்பாளருடன் தனது மகிழ்ச்சியை பகிரும் காட்சி.



சச்சினின் விக்கெற்றினை வீழ்த்திய ஷோய்ப் அக்தார் சக வீராகளுடன்.

# இந்திய கிரிக்கெற் அணிக்கு பிரதமர் வாஜ்பாய் பாராட்டு

சுமார் 14வருட இடைவேளையின் பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான்-இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெற் போட்டியில் முதல் வெற்றியைப் பெற்றிருக்கும் இந்திய அணிக்கு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் தனது மும்மரமான அலுவல்களுககு மத்தியில் போட்டியின் கடைசி ஒரு மணி நேரத்தையும் தொலைக்காட்சியில் கண்டு கழித்ததாக பிரமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் தனது வாழ்த்துச்செய்தியில இந்திய அணியினரின் துடுப்பாட்டத் திறமையாலும், சிறந்த பந்துவீச்சாலும இந்த வெற்றியைப் பெற்றுள்ளனர். குறிப்பாக போட்டியின் கடைசி ஓவரைப் பந்துவீசிய அஸீஸ் நெஹ்ராவை தான் பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி தனது வாழ்த்துச் செய்தியில் இந்திய அணி அதிகளவு ஓட்டங்களைக் குவித்திருந்த போதும் போட்டியின் ஓவர்வரை வெற்றி யார் பக்கம் சாயும் என்பதை யாராலும் ஊர்ஜிக்கமுடியாமல் போனது. அத்துடன் தனது பாராட்டையும், மகிழ்ச்சியையும் இந்திய அணிக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் பிரதமர் பர்வேஸ் முஷாரப் இந்திய அணக்கு தனது பாராட்டைத் தெரிவித்தார். அவரது வாழ்த்துச்செய்தியல் பாகிஸ்தானிய மக்கள் குறிபபாக கராய்ச்சி மக்கள் இந்திய அணிக்கு பெரும் வரவேறபளித்தது. தமது ஆதரவை வெளிப்படுத்தினர் எனக் குறிப்பிட்டார் (தி-121)

# இன்று ஒரு தகவல்

## பேராசை

அள்ள அள்ளக்குறையாதது அட்சய பாத்திரம் என்று நம் எல்லோருக்கும் தெரியும். அதைப் பற்றி நன்கு கேள்விபட்டிருக்கின்றோம். ஆனால் போடப்போட நிறையாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா? நம மில் பலரிடம் அந்தப்பாத்திரம் உண்டு. அது தான் பேராசை என்ற பாத்திரம் அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசையைப் பற்றி சூ:பி இலக்கியத்தில் ஒரு பிரபலமான கதை உண்டாம். அதை ஒரு பெரியவர் எடுத்துக்கூறியிருக்கிறார்.ஒரு மன்னர் நகர்வலம் போய்க கொண்டிருக்கின்றார். ஒரு பிச்சைக்காரன் மன்னரின் எதிரில் போய்க்கொண்டிருந்தான்."பிச்சை கொடுங்கள்" என்றான். "எனது அமைதியைக் கெடுக்காதே போ! " என்றார் மன்னர். அவன் சிரித்தான். "அரசே!உங்கள் அமைதி கெடக்கூடிய நிலையில் இருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது" என்றான்.

எதிரில் நிற்பது வெறும் பிச்சைக்காரன் அல்ல. யோகி என்பதை மன்னர் புரிந்துகொண்டார். "துறவியே! உங்களுக்கு என்னவேண்டுமானாலும் கேளுங்கள். கொடுப்பேன்" என்றார். அந்தத்துறவி மீண்டும் சிரித்தார். " அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்" என்றார். மன்னருக்குக் கோபம் வந்து விட்டது. இவர் என்ன இப்படிக் கூறுகிறார் என்று நினைத்தார். நகர் வலத்தைப் பாதியில் நிறுத்தினார்.

"வாருங்கள் அரண்மனைக்கு" என்று துறவியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார். துறவி தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார்." இது நிறைய எனக்குப் பொற்காசுகள் வேண்டும்" என்றார். "பூ! இவ்வளவு தானா" என்று கூறிக்கொண்டே கையைத் தட்டினார் மன்னர்.

ஒரு பெரிய தாம்பாளம் நிறையப் பொற்காசுகள் வந்து சேர்ந்தது. அதை அள்ளிப்போட்டார். போடப்போட அந்தப் பிச்சைப் பாத்திரம் பொற்காசுகள் அனைத்தையும் உள்ளே வாங்கிக் கொண்டிருந்தது. அரசாங்கக் கஜானாவே காலியாகி விட்டது. மூட்டை மூட்டையாகப் பொற்காசுகளைப் கொட்டினார். அது விழுங்கிக் கொண்டே இருந்தது. கடைசி வரை அந்தப்பிச்சைப் பாத்திரம் நிரம்பவே இல்லை. அரசரிடம் இருந்த கர்வம் போய்விட்டது. அப்படியே பொத் என்று துறவியின் காலில் விழுந்தார்.

அப்போது அந்தத்துறவி சொன்னாராம். மன்னா இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களால் மட்டுமல்ல வேறு யாராலுமே நிரப்பமுடியாது. அதற்கு என்ன காரணம் என்றால் இது சாதாரண பிச்சைப் பாத்திரமல்ல. "பேராசைகளுடன் வாழ்ந்து செத்துப்போன ஒரு மனிதனின் மண்டை ஓடு இது" என்றாரம் பாருங்கள். இது தான் அந்த சூ:பி இலக்கியக் கதை . செத்த பின்பும் நிறைவு இல்லாவிட்டால் அது எப்படிப்பட்ட பேராசை என்று பாருங்கள்.

நமது ஆள் ஒருவர் திருமணத்திற்குப் பெண் தேடிக கொண்டிருந்தார். அழகு,அறிவு,படிப்பு எதுவும் தேவையில்லை. பணம் மட்டும் இருந்தால் போதும் என்று எல்லோரிடமும் கூறிவைத்தார். நீண்ட நாட்களின் பின் ஒரு பணக்காரர் கிடைத்தார். "இதோபாருங்கள் எனக்கு 20 வயதில் ஒரு மகள் அவளை நீங்கள் திருமணம் செய்வதற்கு இரண்டு இலட்சம் தருவேன். 25 வயது மகளைத் திருமணம் செய்வீர்களானால் 2, 1/2 லட்சம் தருவேன். 30 வயது மகளை திருமணம் செய்வீர்களானால் 3 லட்சம் தருவேன். என்ன சொல்கிறாய்?" என்றார்.

இவன் சிறிது நேரம் யோசித்தான். அதன் பின் அவரை நிமிர்ந்து பார்த்தான் "ஏன் சார் உங்களிடம் 50 வயதில் மகள் இருக்கிறாளா? " என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அனுரா வெளியிட்ட கருத்துக்கு தேர்தல் கண்காணிப்புக் குழு விசனம்

(கொழும்பு)

இலங்கைத்தேசிய பொலிஸ் ஆணைக்குழு கலைக்கப்படுவது தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்க வெளியிட்ட கருத்துக்கு தேர்தல் கண்காணிப்புக்குழு கடும் விசனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தும் இலங்கைத்தேசிய பொலிஸ் ஆணைக்குழு கலைக்கப்படும் என அண்மையில் அனுராபண்டாரநாயக்க கருத்து வெளியிட்டிருந்தார்.

அனுராபண்டாரநாயக்கவின் மேற்படி கூற்றானது ஒரு நிறுவனத்தை அவமதிப்பதற்கு சமமானது மட்டுமன்றி, நீதியான நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதிலும் பெரும் சிரமங்களையும் சிக்கல்களையும் தோற்றுவிக்கும் ஒன்றாகவே அமையும் என தேர்தல் கண்காணிப்புக்குழு கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், உறுதியானதும் சுதந்திரமானதுமான பொலிஸ் ஆணைக்குழு ஒன்றினைத் தொடர்ந்து பேணிவருவதன் மூலமே நாட்டின் சட்டத்தையும் ஒங்கையும் நிலை நாட்ட முடியும் என தாம் உறுதியாக நம்புவதாகவும் தேர்தல் கண் காணிப்புக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (தி-18)

# புலிகளின் பிளவு குறித்து நான் கருத்துக்கூற விரும்பவில்லை

## பேரியல் அஷ்ரப் நழுவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவுகள் குறித்து நான் எந்தவிதமான கருத்தையும் கூற விரும்பவில்லை.

அவர்கள் இன்று பிளவுபடுவார்கள் நாளை ஒற்றுமைப்படுவார்கள் இது எந்தவொரு கட்சியிலும் ஏற்படுகின்ற வழமையான பிரச்சினை என்பதால் இது பற்றிக்கவனம் செலுத்தத்தேவையில்லை.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் கிழக்கு மாகாண நிலைமை குறித்து ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத்தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிளவுநிலை பற்றி நாம் கருத்துகளைக் கூற வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் அவர்களின் சில செயற்பாடுகள் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமை சீர்குலைந்து விடுமோ என்ற அச்சம் உருவாகியிருப்பதை கூறவேண்டியிருக்கிறது.

வடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியுள்ள கருணாவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனும் இணைந்து எமது முஸ்லிம் மக்களுக்கு செய்த அநியாயத்தை நாம் ஒரு போதும் மறக்கவில்லை.



தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடிய விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லிம்களின் உரிமைகளை பறிக்க முயற்சித்து வந்தமையும் முஸ்லிம் மக்கள் அறிவார்கள்.

எனவே, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு நிலைகுறித்து நாம் எந்த வித கவலையும் அடையவில்லை. ஆனால் அது தமிழ் முஸ்லிம் மக்களின் நல்லுறவை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும் என்றார். (தி-60;10)

# இராசிபலன்

15. 03. 2004

(பங்குனி 02,திங்கட்கிழமை)

நவமி பிற்பகல் 12.40மணி வரை

பூராடம்சித்திம் பின்னிரவு 1.20மணிவரை

இராகுகாலம் 7.50-9.20 மணிவரை

சுபநேரம் 12.20-1.50மணிவரை

**மேடம்**

காரிய தாமதம், பெரியோர் மனஸ்தாபம், புதிய தொழில் சிந்தை, ரோக நிலை.

**இடபம்**

ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம், மனஸ்தாபம், சயன சுகக்குறைவு.

**மிதுனம்**

செய்தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, நண்பர் சந்திப்பு, சத்துருஜெயம்.

**கடகம்**

உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, புதிய முயற்சி.

**சிங்கம**

தாழ்ந்த சுபாவம், பிரயாணம், சிறு வியாதி, நல்ல காரியம்.

**கன்னி**

சத்துருஜெயம், தொழிலில் ஆர்வம், மனச் சஞ்சலம், காரிய தாமதம்.

**துலாம்**

சகோதரர் உதவி, தேக நலன்,பிரயாண நன்மை, பொருள்சேர்க்கை.

**விருச்சிகம்**

இடமாற்றம், மாதர் நட்பு, வீண் விவாதம், காரிய தாமதம்.

**தனுசு**

சயனசுகம், எடுத்த காரியம் கைகூடும், சிந்தனை மிகுதி, பெரியோர் உதவி.

**மகரம்**

அமைதிக்குறைவு, நண்பர் சந்திப்பு, சுப செலவு, காரிய அலைச்சல்.

**கும்பம**

பெரியோர் மதிப்பு, செய்தொழில் நன்மை, கீர்த்தி, முயற்சி கைகூடும்.

**மீனம்**

நிலைமாற்றம், நல்ல சம்பவம், உற்சாகம், தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# வாக்கு எண்ணும் பணிகளின் போது தொலைபேசிப் பாவனைக்குத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் 13ஆவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலை ஊழல்கள் அற்ற வகையில் நியாயமாக நடாத்துவதற்காகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இதனடிப்படையில், தேர்தல் காலத்தில் வாக்குகள் எண்ணும் நிலையங்களில் கடமையாற்றும் அலுவலர்களோ அன்றி அங்கு பிரவேசிக்கும் வேட்பாளர்களோ கையடக்கத் தொலை பேசியைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டள்ளதுடன், அந் நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிஂயக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாக்குகள் எண்ணும் பணிகள் நிறைவடையும் முன்னர் வெளியிடங்களுக்குத் தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்படலாம் என்பதனாலேயே இம் முன்னேற்றபாடு எடுக்கூப்பட்டுள்ளது. அத்துடன், வாக்குகள் எண்ணும் நிலை யங்களுக்குள் தீப்பெட்டி மற்றும் சிகரெட் போன்ற பொருட்கள் எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

# தேர்தல் பிரசாரங்களில் புதிய முன்னணிக்கு இடைஞ்சல்

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் துன்றுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக செல்லும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மிரட்டி வருவதுடன், தாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவின் பாதுகாப்பு அதிகாரிகளை ஐக்கய தேசியக் கட்சி வேட்பாளரும் அவரது ஆதரவாளூரும் அண்மையில் வெலிக் கடைப் பகுதியில் வைத்து தாக்கியுள்ளார்கள் எனவும், இவர்கள் நடத்திய இந்த தாக்குதலை பொலிஸார் கண்டும் காணாததுமாக இருந்துள்ளார்கள் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். எனவே இத்தகைய பிரச்சினைகள் தொடர்ந் தும் இடம்பெறாதிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்என்றார்.(தி-60,10)

# மாணவர் வரவு குறைவு அதிகாரிகள் ஆராய்வு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உளள பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவு தொடர்பாக கல்வித திணைக்கள அதிகாரிகளுடன், கிராம அலுவலர்கள் சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோர் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையில் குறிப்பாக நாரந்தனைப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுகிறது. இது குறித்து பெற்றோருடன் தொடர்பு கொண்டு மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்கு வர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(தி-75)

# தலைமுடி நரைத்தலும் அதற்கான காரணங்களும்

இதறகு முன்பாக நான் உடம்பை இழுக்கானது என்று நினைத்து அதனைப் பாதுகாக்காது விட்டுவிட்டேன். இப்பொழுது முதல் உடம்பைப் பாதுகாக்க ஆரம்பித்தேன். என்ன ஆச்சரியம்! என் உடம்புக்குள்ளே ஓர் ஆபூர்வமான சக்தி மறைந்திருக்கக் கண்டேன். அது முதல் என்னுடைய உடம்மை நன்கு பேணத் தலைப்பட்டேன் என்று திருமூலர் கூறுகிறார்.

பண்டைக்காலத்தில் பெண்டிர் மட்டுல்லாது ஆடவரும் தலையில் நீண்ட முடி வைத்திருந்தனர். ஆண்களும் தலையில் பூச்சூடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. பெண்களின் கூந்தலை வர்ணிக்காத புலவர்களே இல்லையென்று சொல்லிவிடலாம். உடல் ஆரோக்கியத்தின் வாயிலாக தலைமுடியைப் பேணிப் பாதுகாத்தார்கள் அக்காலத்து மக்கள். ஒரு மனிதனுடைய உடல் நலத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்ற மனித உறுப்புக்களில் அவனுடைய தலைமுடியும் ஒன்று! நல்ல ஆரோக்கியமுள்ளவர்களுக்கு அவ்வளவு எளிதில் தலைமுடி நரைப்பதோ உதிர்வதோ கிடையாது. தலை முடி உதிர்வதற்கும் நரைப்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. சில முக்கியமான காரணங்களை மட்டும் இங்கே கூறவிரும்புகின்றேன்.

## பிறவிக் கோளாறு

இளமைக்காலத்திலேயே சிலருக்குத் தலைமுடி உதிரவோ அல்லது நரைக்கவோ செய்கிறது. பரம்பரையாக தலைமுடியினால் பாதிக்கப்படுவோர் பெரும்பாலும் உடல் நலம் குன்றியவர்களாகவே இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் உணவு, உழைப்பு, வாழும் இடம் முதலியவற்றில் மிகுந்த சிரத்தை உடையவர்களாக இருத்தல் அவசியமாகிறது. அங்கனம் இருந்தால் தான் அவர்களால் உடல நலத்தைப் பெறுவதுடன் தலைமுடியையும் பெறமுடியும்.

பிறவியின் காரணமாக சிலர் வெம்மையான உடல்வாகு பெற்றிருக்கிறார்கள். வேறு சிலர் குளிர்ச்சியான உடல்வாகு பெற்றிருக்கிறார்கள். வெம்மையான உடல் உடையவர்கள் மெலிந்தே காணப்படுவார்கள்; அவர்களுக்கு நரை சீக்கிரத்தில் வந்துசேரும். அவர்கள உடம்பில் கல்சியம் புளோரைட்டு மிகுந்திருப்பது அவர்களது உடல் மெலிவிற்கும் நரையாவதற்கும் ஒரு முதன்மையான காரணம் என்று சொல்லாம. அடுத்தபடியாக குளிர்ச்சியான உடல்வாகு பெற்றிருப்பவர்கள் சதைப்பிடிப்புடன் காணப்படுவார்கள், தலைமுடி மிக எளிதில உதிர்ந்து போகும். இதற்கு கல்சியம் குறைந்திருப்பது ஒரு காரணமாகலாம். எனவே பிறவியின் காரணமாக கல்சியம் புளோரைட் மிகுந்தோ அல்லது குறைந்தோ காணப்படுவதால் தலை முடியும் அதன் பாதிப்புக்குள்ளாகின்றது.

## சூழ்நிலைக் கேடு

மக்கள் வாழுகின்ற இடமும் அவர்களது தலைமுடியை வெகுவாகப் பாதித்துவிடுகிறது. கடற்கரைப் பகுதியில் வாழும் மீனவர்களுக்குப் பெரும்பாலும் தலைமுடி நரைத்திருப்பதைக் காண முடிகிறது. அவர்கள் கடினமான உடல் உழைப்பை மேற்கொண்டிருந்த போதிலும் சூழ்நிலை அவர்களது தலைமுடியைப் பாதிக்கிறது. தொடர்பு கொள்வதற்கு 5 கிலோமீற்றர் தூரத்தை நடந்தே கடந்தார்கள். சைக்கிளைக்கூட பயன்படுத்த முடியாத அவல நிலை! அவ்வளவு மணல் பாலை! சூரியனுடைய வெம்மையைத் தாங்க முடியாத அவர்களது தலைமுடியும் கூட வெளுப்பாகிவிட்டது! அவர்களில் தலைமுடி உதிர்ந்து வழுக்கையானவர்களைப் பார்ப்பது அரிதாக இருந்தது! சூரிய ஒளி கல்சிய விற்றமின் Dயை அதிகரிக்கிறது. அளவுக்குமிச்சிய கல்சியம் தலைமுடி நரைப்பதற்கு ஓர் இன்றியமையாத காரணமாகும்.

வெய்யில் தாக்காத அல்லது குளிர்ப்பகுதிகளில் இருப்பவர்களுக்கு தலைமுடி நரைப்பதற்குப் பதில் உதிர்ந்து போகிறது. எடுத்துக்காட்டாக, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பம் என்கிற நகரம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. ஆண்டில் இரண்டு மாதங்கள் மட்டுமே இந் நகரத்து மக்கள் சூரியனுடைய அதிக பட்ச வெப்பத்தை எதிர்கொள்கிறார்கள். இங்கு 40 வயதுக்கு மேற்பட்ட பலரிடம் தலைமுடி உதிர்ந்தே காணப்படுகின்றது.

## பொருந்தாத உணவு

தலைமுடி பாதிப்புக்கு நாம் உண்ணுகின்ற உணவு ஒரு முதன்மைக் காரணமாகும். உணவில் கல்சியம் புளோரைட் மிகுந்திருப்பது முடி நரைத்தலை ஊக்குவிக்கிறது. வியர்வை உலர்ந்த பின்னர் கழுத்து, முகம் போன்ற பாகங்களில் உப்பு மிகுதியாகப் படிந்திருப்பதை ஒரு சிலரிடம் காணலாம். இது கல்சயம் புளோரைட் மிகுதியாக இருப்பதைக் காட்டுகிறது.

கல்சியம் நீரில் கரையும் தன்மையுடையது. தேவையற்ற கல்சியத்தைப் போக்குவதற்கு நாம் மிகுதியாகத் தண்ணீர் அருந்துவது நல்லது. கல்சியம் பெருமளவு சிறுநீர் மூலமாகவும் சிறிதளவு தோல் மூலமாகவும் வெளியேற்றப்படுகிறது. போதியளவு தண்ணீர் அருந்தாத போது சிறுநீர்ப்பையில் சிறுநீர் கற்களையும் தோல் தொடர்பான சொறி, சிரங்கு போன்ற நோய்களையும் உண்டாக்கி விடுகிறது. மேலும் அடிவயிற்றில் வலி, வயிற்றுப்போக்கு முதலிய நோய்களும் கல்சியம் புளோரைட் மிகுதியாவதால் உண்டாகின்றன. மஞ்சள் காமாலை, அம்மை போன்றவைகள் தொற்றுநோய்களாயினும் குளிர்காலத்தில் அதிகமாக வருவதில்லை. கோடைகாலத்தில் உடல் வெப்பமடைவதால் மிக எளிதாக வருகின்றன. நீர் அருந்தி உடல் சூட்டிற்கு காரணமான கல்சியம் புளோரைட் நீக்கப்பட்டால் முடி நரைத்தல், சொறி, சிரங்கு, வயிற்றுக் கோளாறு, மஞ்சள் காமாலை அம்மை போன்ற ஏராளமான நோய்களைத் தடுத்துவிடலாம். பாலியல் தூண்டலுக்கும் சில பெண்களின் உதடுகளில் மீசை அரும்புவதற்கும் ஆண்களில் சிலருக்கு உடம்பு முழுக்க அடர்ந்த முடி வளர்வதற்கும் கூட இந்தக் கல்சியம் புளோரைட் காரணமாகலாம்.

கல்சியம் நமது உம்பிற்கு மிகவும் அவசியமான ஒன்று. எலும்பு உறுதியாவதற்கும் நோய் எதிர்ப்பாற்றலுக்கும் தேவைப்படுகிறது. கல்சியம் குறைந்தால் முடி உதிர்தல், சளித்தொல்லை, மூட்டுக்களில் வலிபோன்ற அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே, கல்சியம் மிகாமலும் குறையாமலும் பார்த்துக்கொள்வதே சாலச சிறந்தது.

நீரில் கரையும் தன்மை கல்சியத்துக்கு இருப்பதால் கல்சிய உணவுப் பொருள்களை வேக வைத்து உண்பது நல்லது. முட்டைகோஸ், மொச்சை, அகத்திக் கீரை முதலியவற்றை வேகவைத்து உண்பதனால் அவற்றிலுள்ள அதிகப்படியான கல்சியம் புளோரைட்டை எளிதாக அகற்றிவிடலாம். கல்சியம் வேண்டாதோர் (நரையைப் போக்க) பழங்கள், முட்டை, பட்டாணி, இறைச்சி, அரிசி முதலியவற்றை உண்ணவேண்டும். கல்சியம் வேண்டுவோர் (முடி உதிர் தலைத் தடுக்க) கீரைகள், பால், சுண்டல், மொச்சை, கோதுமை முதலியவற்றை உண்ணலாம்.

தலைமுடி உதிர்வதற்கு உடல் உழைப்பின்மையும் ஒரு முக்கிய காரணமாகும். கடும் வெய்யிலில் வருந்தி உழைத்தல் தலைமுடி நரைப்பதற்கு எப்படிக் காரணமாகிறதோ அது மாதிரியே உழைப்பில்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது முடி உதிர்வதற்கு ஒரு காரணமாகிறது. தலையை மேலும் கீழும் அசைப்பதும் பக்கவாட்டில் திருப்புவதும் ஆகியன தலைக்குத் தருகின்ற பயிற்சி. தலையில் இரத்த ஓட்டத்தைப் பெருகச் செய்து உரோமக்கால்களை நிலைநிறுத்துகின்றன. தலைகீழாக நிற்பதனாலும் பயன் உண்டு. தலைமுடியை திருமபத் திரும்ப அழுத்தி சீப்பினால தலை வாருவதிலும் நன்மை விளையும். சோப்பு, சம்போ, வாசனை எண்ணெய் முதலியவற்றில் வேதியியல் பொருள்கள் அடங்கி இருப்பதால் அவற்றைப் பயன்படுத்துகின்றபோது எதிர்மறை விளைவுகளே ஏற்படுகின்றன. □

**வை.குமரவேல்**

# குற்றம் இழைத்தவர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது

## ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

(கொழும்பு)

குற்றம் இழைத்தவர்கள் எவராவது எக்கட்சி சார்பாகப் போட்டியிட்டாலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவருக்கு எவரும் வாக்களிக்கக் கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுக்கொண்டுள்ளார்.



குற்றச் செயல்களைத் தடுப்பது என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

மாவட்ட செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில், ஜனாதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மாவட்டச் செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் தத்தம் பகுதிகளில் தலைமைதாங்கி குற்றச செயல்களில் ஈடுபடுபவர் களைத் தடுப்பதற்கு தாமாகவே முன்வந்து செயற்படவேண்டும்.

பொது மக்களைப் பொறுத்தவரையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் எந்தவொரு நபரையும் பாராளுமன்றம் செல்லவிடாது தடுப்பது அவர்களது முக்கியமான கடமையாகும்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களில் அனேகமானவர்களே இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு அரசியல்வாதிகளே திருப்திகரமான பதிலைக் கூறவேண்டும்.

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மற்றும் பரதேச செயலாளர்களும் ஆதரவு தரவேண்டும்.

குற்றச் செயல்களை ஒழிப்பது தொடர்பாக தேசிய ஆலோசனைச் சபை தெரிவித்துள்ள சிபார்சுகளை பயனுள்ளவகையில் அமுல் செய்வதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

நாட்டில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு 1977 ஆம் ஆண்டு அறிமுகஞ் செய்யப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஒரு காரணமாக இருக்கின்றது.

எனவே, இது விடயத்தில் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

குற்றச் செயல்களை தடுப்பதற்கு நாம் எடுத்துள்ள முயற்சிகள் அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காகவென எவரும் கருதக்கூடாது.

குற்றச் செயல்களால் எந்தவொரு இனத்தைச் சேர்ந்த பொதுமகனும் பாதிக்கக் கூடாது என்பதற்காகவே நாம் இந்த முயற்சியில் இறங்கியுள்ளோம் என்றார்.

இக் கலந்துரையாடலில் பொலிஸ்மா அதிபர், உள்துறைப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும குற்றத்தடுப்பு தேசிய ஆலோசனைச் சபைப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-60,10)

## நிவாரண முத்திரைகள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்ட மக்களுக்கான சமுர்த்தி நிவாரண முத்திரைகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்பதாக இம் முத்திரைகளை வழங்குதற் பொருட்டு பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்பொழுது சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (து-75)

## சம்பந்தனை சொல்ஹெய்ம் சந்திப்பார்

(கொழும்பு)

நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தனை இன்று திங்கட்கிழமை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் தேர்தல் நிலைமைகள் என்பன குறித்து ஆராயவுள்ளார். (த)

## "வரி மன்னிப்பு" தொடர்பான மனு 17 ஆம் திகதி பரிசீலிக்கப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வர்த்தகர்களுக்கு வழங்கிய "வரி மன்னிப்பு" இலங்கை அரசியல் யாப்பு விதிகளை மீறுகின்றதா? என்பது பற்றித் தீர்மானிக்குமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த 5 நீதியரசர்கள் கொண்ட குழு எதிர்வரும் 17 ஆம் திகதி பரிசீலனைகது எடுத்துக்கொள்ளவுள்ளது.

பிரதம நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்கள் குழுவில் திருமதி சிரானி பண்டாரநாயக்க, எச்.எஸ்.சுஜாத்தா, நிகால் ஜெயசிங்கா, அஸ்ரப், என்.டி.சில்வா ஆகியோர் இடம் பெறுகின்றார்கள். (து-60,10)

# இந்திய இராணுவத் தளபதி விஜ் அமெரிக்க விஜயம்

## இராணுவ ஒத்துழைப்பு பற்றிப் பேச்சு

(வாஷிங்டன்)

இந்திய-அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பு மேம்பாட்டிருப்பது குறித்து அமெரிக்கா திருப்தி தெரிவித்துள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை மூலம் இது மேலும் வலுப்பெறுமெனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 10 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ், அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்டையும் அமெரிக்கத் துணைத் தளபதி ஜெனரல் பீட்டரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்பின்போது, இரு தரப்பு இராணுவ ஒற்றுமை மேம்பாடு அடைந்திருப்பதாகவும், இந்த ஒற்றுமை தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் மேலும் அதிகரிக்கும் என்றும் ராம்ஸ்பீல்ட் கூறினார்.

வரும் காலகட்டத்தில் இது தொடர வேண்டுமென விருப்பம் தெரிவித்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் இந்தியா வரவிருக்கும் தமது விருப்பத்தையும் வெளியிட்டார்.

இந்தியா-அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் இராணுவ ஒத்துழைப்பு வளர்ந்துவரும் சூழ்நிலையில் அதை மேலும் வலுபடுத்தும் வண்ணம் அமெரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜெனரல் விஜ்ஜுக்கு அமெரிக்க இராணுவத் தலைமைத் தள பதி பீட்டர் ஸ்கூமேக்கர் விடுத்த அழைப்பின் பேரிலேயே ஜெனரல் விஜ் 10 நாள் பயணமாக வாஷிங்டன் சென்றிருந்தார்.

அங்கு அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் வலித்மான் சிங்கை சந்தித்துப் பேசினார்.

ஜெனரல் விஜ்ஜுடன் இராணுவ உயர் அதிகாரிகளும் அமெரிக்கா சென்றுள்ளனர். (து)



ஹெயிற்றியில் அங்குமிங்குமாக நடைபெறும் வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கத் தலைநகர் போட் ஓ பிரின்ஸில் அமெரிக்க வீரர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

### ஈராக் குண்டு வெடிப்பில் யு.எஸ். இராணுவ வாகனம் நாசம்

(பக்தாத்)

இராக்கில் சாலையோரத்தில் வைககப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இராணுவ வாகனமொன்று நாசமடைந்தது. 2 இராணுவ வீரர்கள் இறந்தனர்.

தலைநகர் பக்தாத்துக்கு மேற்கே 70 கி.மீ.தூரத்தில் உள்ள ஹபானியா நகரில் இச் சம்பவம் நிகழ்ந்தது. அதிரடிப்படை வீரர்களை ஏற்றிக்கொண்டு இராணுவ வாகனங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அந்த நகர வீதிவழியாகச் சென்றபோதே இக்குண்டு வெடித்தது. (து)

உலக தரிசனம்

## சதாமுக்கு உளவு பார்த்த அமெரிக்கப் பெண்

(வாஷிங்டன்)

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பதவியிலிருந்த போது அவருக்கு அமெரிக்கா தொடர்பான இரகசியங்களை வழங்கும் உளவுவேலை பார்த்த அமெரிகக் பெண் மீது மெரிலான்ட் நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

41 வயதான கஷான் லின்டலர் என்ற மேரிலான்டைச் சேர்ந்த இந்த அமெரிக்கப் பெண் ஒரு ஊடகவியலாளராவார்.

சதாமுக்காக உளவு பார்த்தற்காக இவர் 10,000 அமெரிக்க டொலர்களைச் சன்மானமாகப் பெற்றுள்ளார்.

1999-2002ஆண்டு காலப் பகுதியில் தகவல் சேகரிக்கும் பொருட்டு இவர் ஐ.நா சபைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் அதன் பின் 2002ல் பக்தாத் சென்றதாகவும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உளவுத் தகவல்களைச் சேகரிப்பதற்கு ஊடகவியலாளர் என்ற அடையாளம் இவருக்குச் சதகமாக அமைந்திருந்தாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருக்கும் கஷான் லின்டலா ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரான கெரோல மொஸ்லியின் உறவினருமாவார். (து)




ஸ்பெயின் புகையிரத குண்டு வெடிப்பில் மரணமடைந்தவர்களில் 40 பேரின் சடலங்கள் இறுதிக் கிரியைக்காக எடுத்துக் கொண்டு செல்லப்பட்ட போது திரண்டிருந்த இலட்சக் கணக்கான மக்கள்.

## பலஸ்தீனத் தடுப்புச் சுவர் 170 கி.மீற்றர் குறைப்பு

(ஜெருசலேம்)

அமெரிக்காவைத் திருப்திப் படுத்தும் விதத்தில் பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் இஸ்ரேல் அரசால் அமைக்கப்பட்டுவரும் 180 கி.மீ.தூரத் தடுப்புச் சுவரை 170 கி.மீ.களால் குறைத்துக் கொள்ள இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் முன் வந்துள்ளார்.

இஸ்ரேல் 180 கி.மீ.நீளமான தடுப்புச் சுவரை அமைத்துள்ளது பலஸ்தீனர்களது காணிகளை அபகரிக்கும் செயல் என பலஸ்தீனமக்கள் குரலெழுப்பி வருகின்றார்கள்.ஆனால் அதேநேரத்தில் தற்கொலைப் போராளிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே இச்சுவா அமைக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறுகின்றது.பலஸ்தீனப் பகுதிகளை ஆக் கிரமிப்புச் செய்யும் இஸ்ரேலின் இந்தச் சுவர் அமைப்புத் தொடர் பான விடயம் சர்வதேச நீதிமன்றத் தில் ஆராயப்பட்டு வருகிறது.

சமீபத்தில் இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதால் அமெரிக்கத் தலைவர்களின் நல்லெண்ணத்தைப் பெறும் ஒரே நோக்கிலேயே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளாரென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல்-பலஸ்தீனத் தலைவர்கள் நேரடியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள நிலையில கடந்த புதனன்று இஸ்ரேல் இராணுவத் தாககுதலில் 5பலஸ்தீனப் போராளிகள் கொல்லபட்டுள்ளனா. இத்தாக்குதலுக்காக இஸ்ரேல் மீது பதில் நடவடிக்கை எடுக்கப்படுமமென பலஸ்தீனப் போராளிகள் அறிவித்துள்ள

## ஸ்பெயின் குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்கிறது அல்-கெய்டா

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிடில கடந்த வியாழக்கிழமை நடந்த குண்டு வெடிப்புக்கு அல்-கெய்டாத் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்பதாகத் தெரிவித்துள்ளது.

இதைப்போல் துருக்கி இஸ்தானபுல் நகரில் நடந்த தற்கொலைத் தாக்குதலுக்கும் அந்த அமைப்பு பொறுப்பேற்பதாக லண்டனில் வெளியாகும அல-கத்ஸ் அல்-அராபி என்ற இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 11ம் திகதியிட்ட அந்த அறிக்கை அபுஹப்ஸ் அல்-மஸ்ரி படை அல்-கெய்டா என்ற அமைப்பின பெயரில் அனுப்பப்பட்டுள்ளது.

கூட்டணி நாடுகளின் தூண்களில் ஒன்றான ஸ்பெயினுக்கு அபுஹப்ஸ் அல-மஸ்ரி பிரிகேட் தற்கொலைப் படை பலத்த அடி கொடுத்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தபோது, அதற்கு ஆதரவாக 1,300 துருப்புகளை ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் மரியா அஸ்னா் பக்தாதுக்கு அனுப்பியிருந்தார்.

அவரைக் கேள்வி கேட்கும் வகையில் அறிக்கையில், உங்களை யாகாப்பாற்றப் போகிறார்கள். பிரிட்டனா? ஜப்பானா? இத்தாலியா? அமெரிக்காவின் கூட்டாளி நாடா? எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைப்போல் துருக்கியில் தஙகும விடுதியில் கடந்த செவ்வாய் இரவு நடந்த தாககுதலுக்கும் அதே அமைப்பு பொறுப பேற்றுள்ளது.இஸ்தான்புல் நகரில் உள்ள யூதர்களின் விடுதியின் மீது ஜண்ட் அல்கத்ஸ் போராளிகள நடத்திய தாக்குதலில் மூவர் இறந்துள்ளனர். (து)

## அடுத்த விண்வெளிப் பயணத்தில் பெண்ணை அனுப்ப சீனா முடிவு

அடுத்த ஆண்டு விண்வெளிப் பயணத்தின்போது முதன் முறையாக பெண் வீராங்கனை ஒருவரை அனுப்ப சீனா முடிவு செய்துள்ளது.

இதற்கான பெண் வீராங்கனையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆட்சேர்ப்புப் பணி விரைவில் மேற்கொள்ளப்படுமென்று விண் வெளிமைய மூத்த அதிகாரியொருவர் கடந்த வெள்ளியன்று தெரிவித்துள்ளார்.

விண்வெளி வீரர்கள் அடங்கிய முதல் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண் வீரர்கள் அனைவரும் சீன விமானப் படையிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கடந்த 1999 முதல் சீனா 5 தடவைகள் வெற்றிகரமாக விண்வெளி ஓடத்தைச் செலுத்தியுள்ளது.

சீனாவின் ராக்கெட் மற்றும் விண்வெளித் தொழில்நுட்பம் போதுமான தன்னிறைவைப் பெற்றுள்ளது என்பதையே இது பறைசாற்றுகிறது என அந்த விண்வெளி மைய மூத்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(து)

## முத்தரப்பு வணிகத் திட்டத்தை இந்தியா, பிரேஸில்,தெ.ஆபிரிக்கா ஏற்பு

(புதுடில்லி)

தெற்குப் பகுதி நாடுகள் இடையே வாத்தக ஒத்துழைப்பை மேம் படுத்த புதுடில்லியின் முத்தரப்பு வர்த்தகத் திட்டத்தை நடைமுறைப் படுத்த இந்தியா ,பிரேஸில், தென் ஆபிரிக்க நாடுகள் சம்மதித்துள்ளன.

அமெரிக்கா,ஐரோப்பிய நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை மேம்படுதது வதற்கான திட்டத்தை நடைமுறைப் படுத்துவது போன்று இந்தியா, பிரேஸில்,தென் ஆபிரிக்கா இடையே முத்தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்த புதுடில்லி முத்தரப்பு திட டத்தை இந்தியாவும் தென் ஆபிரிக் காவும் பிரேஸிலும் ஏற்றுள்ளது என அயலுறவு அமைச்சா் ஜஷ்வந சின்ஹா கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள பிரேஸில் நாட்டு அயலுறவு அமைச்சர் செல்சோ அமோரின் ,தென் ஆபிரிக்க அயலுறவு அமைச்சர் என். சி.டிலை மினிஜுமா ஆகியோருடன் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையில் இம்முடிவு எட்டப்பட்டதாகவும் இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து இன்றும் தொடாந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாகவும் ஜஸவந் சின்ஹா தெரிவித்தார்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு இடையே பொருளாதார், சமூக மேம்பாட்டை உறுதிப்படுத்த வெளியிடப்பட்ட பரேஸில் பிரகடனத்தின் அடிப்படையில் புதுடில்லி வர்த்தகத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்று சின்ஹா கூறினா். தெற்கு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டம் உருவாக்கபட்டுள்ளது என்று செய்தியாளர்களிடம் பேசிய சின்ஹா,இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 3 நாடுகளின் விமானப் போக்கு வரத்து அமைச்சகங்கள் பேச்சுவார்த்தை நடத்த உள்ளன என்றும் அதேபோல கபபல் கட்டுதல் குறித்தும் 3நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப பரிவர்த்தனை செய்வது குறித்தும ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்சா என்று அழைக்கப்படும் இந்தியா, பிரேஸில், தென் ஆபிரிக்க முத்தரப்பு விவாத அமைப்பின் வாயிலாக இம்மூன்று நாடுகளுக்கும் இடையே நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பும் வர்த்தகத் தொடர்பும் மேம்படுத்தப் படும என்று சின்ஹா கூறினார். (து)



தென்கொரிய பிரதான சாலையில் கடுமையான உறைபனிப் புயலால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு மீட்புப் பணிவீரர்கள் ஹெலிகொப்டரில் இருந்த வண்ணம் பாண், பால் முதலிய உணவுப் பொருட்களை வழங்குகிறார்கள்.

மனத்து மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் -குறள்

வலம்புரி

## பெண்கள் அமைப்புகள் குரல்கொடுக்க வேண்டும்

தமிழகத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ள பெண்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி - அவர்களை அழைத்து வந்து கொழும்பில் தடுத்துவைத்து சித்திரவதை செய்யும் சம்பவம் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இன யுத்தம் காரணமாக தமது சொந்த மண்ணில் வாழ்வது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலையில், ஈழத்தமிழர்கள், கடல்கடந்து தமிழகத்திற்குச் சென்று அங்கே வருடக் கணக்கில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

தமிழக அரசு வழங்கும் நிவாரணத்தோடு காலத்தைக் கடத்தும் இவர்களின் வாழ்வியல் மிகப்பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. எதுவித வருமானங்களுமின்றி பிள்ளைகளைப் படிப்பிக்க வைக்கமுடியாத நிலையில், விதியை நொந்துகொண்டு காலத்தைக் கடத்தும் இவர்கள் பற்றி யாருமே அக்கறைகொள்வதில்லை.

தமிழக அகதிமுகாம்களில் வாடும் இவர்களைத் தாயகத்திற்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்ட போதிலும், அவையாவும் வெறும் புஸ்வாணமாகிப் போனது.

சுருங்கக் கூறின், தமிழகத்து அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழர்கள் குறித்து அவர்களின் சொந்த உறவுகளே அக்கறை கொள்ளாமல் கைவிட்டுவிட்ட நிலைமை மிகவும் வேதனைக்குரியது.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம், மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக ஆக்கியதுபோல, தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் வாழ்கின்றவர்களும், அவர்களின் சொந்த நாட்டிலும், சோதர நாட்டிலும் கைவிட்டவர்களாக வாழ்கின்றனர்.

இத்தகையதோர் துன்பகரமான சூழ்நிலையில் - வறுமை உச்சத்தால் கலாசார பிறழ்வுகள் தலைதூக்குவதும், கட்டுக்கோப்பான வாழ்க்கை குலைந்து போவதும் சர்வசாதாரணமாகும்.

அதிலும், தமிழ்நாடு போன்ற ஏழ்மை இருப்பிடங்கள் இத்தகைய கலாசாரப் பிறழ்வுகளுக்கு ஊக்கம் கொடுப்பதாக உள்ளன.

இந்நிலையில், அகதி முகாம்களில் உள்ள பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி அவர்களை ஏமாற்றி கொழும்பு, வத்தளை மற்றும் குணசிங்கபுரம் போன்ற இடங்களுக்குக் கூட்டிவந்து அவர்களைத் தடுத்துவைத்து சித்திரவதைக்குள்ளாக்கும் சம்பவங்களும் நடைபெறுவதாக வெளியான செய்திகள் பேரதிர்ச்சியைத் தருகின்றது.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருந்த பெண்களில் 12 பேர் தப்பிவந்து வவுனியாவில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் தஞ்சமடைந்துள்ளனர்.

அகதிவாழ்க்கை - வறுமை - அறியாமை போன்றவற்றை சாதகமாக்கிக் கொண்டு பெண்களைக் கடத்திவந்து அவர்களைச் சித்திரவதை செய்யும் கொடூரத்தனம் மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

பண்பாடு-கலாசாரம்-ஒழுக்கம்-மானம் என்ற வைரக்கற்கள் கொண்டு கட்டுவிக்கப்பட்ட தமிழர்களின் உயர்விழுமியங்களை யுத்தம் என்ற அரக்கன் காவுகொண்டிருக்கும் வேளையில், அது குறித்துத் தமிழினம் ஆழ்ந்த துயருற்றிருக்கும் நேரத்தில், மேற்போன்ற நிகழ்வுகள் நெஞ்சைப் பிழிந்து குருதியைக் கொட்டுவதாகவுள்ளது.

தமிழக அகதிமுகாம்களில் இருந்து ஏமாற்றிக் கொண்டுவரப்பட்ட பெண்களில் 12பேரே தப்பிவந்துள்ளனரெனில் ஏனையவர்களின் நிலை என்ன என்பது உடனடியாகக் கண்டறியப்படவேண்டிய விடயமாகும்.

இது விடயத்தில் இலங்கைப் பொலிஸார் தமது கடமையைச் செவ்வனே ஆற்றவேண்டும். அதே வேளை, இது தொடர்பாகப் பெண்கள் அமைப்புக்கள் உரத்துக் குரல்கொடுக்க முன்வரவேண்டும். சர்வதேச மகளிர்தினம்' - பெண்கள் உரிமை என்றெல்லாம் கோஷம் எழுப்பும் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மனிதாபிமான நிறுவனங்கள் தமது பலத்தை அழுத்தி பெண்களைக் கடத்திச் சித்திரவதை செய்யும் கும்பல்களை சட்டத்தின்முன் நிறுத்த முன்வரவேண்டும்.

# ஜனாதிபதியின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஜே.வி.பி. செயற்படுகிறது

## வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த 3 மாதங்களுக்குள் 35 ஆயிரம் வேலை வாய்ப்புகளை வழங்குவேன் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழியானது வெறும் வாக்குறுதி மட்டுமே என புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தெமட்டக்கொடவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து பேசிய அவர், குறுகிய காலத்தில் பெருந் தொகை யான வேலைவாய்ப்புகளை வழங்கும் திட்டத்தை ஐக்கிய முன்ணணியினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளார்கள்.

இருபெரும் கட்சிகளையும் மாறிமாறி ஆட்சியில் அமர்த்துவது இந்நாட்டின் பாரம்பரியங்களில் ஒன்று. இவை அனைத்தும் கட்சிவிட்டு கட்சிமாறும் அதிகார வெறிபிடித்த அரசியல் வாதிகளால் நிகழ்த்தப்பட்டுவருகிறது.

ஆனால், மக்களின் பாரிய பிரச்சினைகளான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சுகாதார வசதியின்மை, போக்குவரத்துப பிரச்சினைகள் பற்றியாரும் கண்டுகொள்வதில்லை. இந்த அரசாங்கங்களால் வெளிநாட்டுச் சக்திகளும், வர்த்தகர்களுமே இலாபமடைந்து வருகிறார்கள். எமது சொத்தான காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை விற்பனை செய்தது தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம். அமைச்சரவை முதல்வரான ஜனாதிபதியும் இதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி 4 அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவது என்ற போர்வையில் ஜே.வி.பியினருக்கு இனிப்பு வழங்கியுள்ளார். இன்று ஜே.வி.பி. இந்த இனிப்பையே சுவைத்துக் கொண்டிருக்கிறது. ஜே.வி.பியினர் மறைமுகமாக சுட்டிக்காட்டிய சிங்கள பௌத்த நாட்டை மட்டும் உருவாக்குவது ஜாதிக ஹெல உறுமயவின் ஒரே நோக்கம. இனப்பிரச்சினை தொடர்பில் ஜே.வி.பியினரிடம் தெளிவான கொள்கை எதுவும் இல்லை. புலிகளுடனான அரசியல் கலந்துரையாடல்களில் ஜே.வி.பியும் பொ.ஐ.மு.யும் தொடர்ந்து நெருக்குதல்களைக் கொடுத்தே வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-6)

## மன்னார் மீனவரிடையே தொழிலில் முரண்பாடு

(மன்னாார்)

இந்திய மீனவர்களினால் தொழிலில் பாதிப்படைந்து வரும நிலையில், தற்போது மன்னார் மீனவர்களாலும் தொழிலில் மிகவும் பாதிப்படைந்து வருவதாகத் தலைமன்னார் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் தாம் ஆழ்கடலுக்குச் சென்று முன்னர் மீன் பிடித்ததாகவும் இப்போது திங்கள்,புதன்,வெள்ளி ஆகிய தினங்களில் இந்திய ரோலாகள் வந்து தமது வலைகளினைச சேதமாக்கி செல்வதாகவும் தலைமன்னார் மீனவர்கள் சுட்டிககாட்டுகின்றனர்.

அத்துடன்,மன்னார் பேசாலையினைச் சேர்ந்த மீனவர்களும் ரோலர்களினைப் பாவிப்பதன் காரணமாகத் தமது மீனபிடிவலைகள் சேதமாவதாகவும், இதன் காரணமாக ஆழ்கடல் தொழிலுக்குத் தாம் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளதுடன், பெருமளவான சொத்தழிவுகள் ஏற்படுவதாகவும் தலைமன்னார் மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இதனால் 60ககும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-18)

## நாட்டை அழிக்கும் செயலில் ஜனாதிபதியும் ஈடுபடுகின்றார்

### பிரதமர் எச்சரிக்கை

(கொழும்பு)

" வடக்கில் இருந்து வருகைதந்த விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகளின் செயற்பாடுகளை யுத்த நிறுத்த உடன்படிக்கை மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிறுத்தியுள்ளது "

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்டானை அவரிவத்தைப் பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் அங்கு உரை நிகழ்த்துகையில், " நாட்டின் எதிர்காலத்தை அழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் தெற்கில் உள்ள தற்கொலைக் குண்டுதாரிகளின் செயற்பாடுகளை எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதியின் பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முற்றாக நிறுத்திவிடும் "

அரசியல் அதிகாரங்களைப் பெறும் பொருட்டு நாட்டின் எதிர்காலத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் செயற்பட்டுவரும் ஜனாதிபதி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்பாடுகளும் தறகொலைக் குண்டுதாரிகளின் செயற்பாடுகளும் சமமானதாகவே இருக்கின்றது என்த் தெரிவித்தார்.

(து-61,10)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கலவியாகும். பலரின் நன்மைக்காக அனைவரின் சுகத்திற்காக உலகில் தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் தங்களைத் தியாகம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும்.

ச்வாமி விவேகானந்தர்.

## தேர்தல் கண்காணிப்புக்கு அவுஸ்திரேலியா நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் இம் ஒமுறை நடைபெறவுள்ள தேர்தல் ஊழலகளறற வகையில் நீதியாகவும் நியாயமானதாகவும் நடைபெறுவதைக் கண்காணிப்பதற்காக அவுஸ்திரேலிய அரசாஙகம் 6 மில்லியன் நிதியுதவியை வழங்கியுள்ளது. அவுஸ்திரேலிய செனட் சபையின் முன்னாள் தலைவரினால் வழிநடந்தப்படும் பொதுநலவாய நாடுகளின் தோதல் கண்காணிப்புக் குழுவினரிடமே மேற்படி நிதி அவுஸ்திரேலிய அரசாஙகாத்தினால் வழங்கபட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் முடிவுகள் அனைத்துத தரப்பினராலும் எதிர்பாாக்கப்படுவதால் இத் தேர்தலை வன்முறைகள் அற்ற விதத்தில் நோர்மையாக நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பாடுபடவேண்டுமெனவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் கோரிக்கைவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-18 )

## தேர்தல் நடவடிக்கைகளுக்காக 1400 பேருந்துகள் சேவையில்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் கடமைகளுக்காக ஆயிரத்து 400 பேருந்துகளை விசேட சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரச போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேர்தல் கால நடவடிக்கைகளுக்காக இவ்வாறு ஆயிரத்து 400 பேருந்துகள் விசேட சேவையில் ஈடுபடுத்தப்படும் பட்சத்தில்,பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பி. வீரகத்தி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், போக்குவரத்துச் சேவையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் பேருந்துகள் இன்று திங்கட்கிழமை முதல் பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இவற்றைத் திருத்தம் செய்யும் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து, சேவைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டே இவை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. அத்துடன், அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் பேருந்துகளில் ஒட்டப்படாமல் பாதுகாப்பதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-18)

## தவக்கால சிந்தனை-20

நலம் பெற விழைபவன் மருத்துவ ஆலோசனைப்படி நடக்கத்தான் வேண்டும். சீரிய வாழ்க்கை வாழ விழைபவன் மூத்தோர் சொற்படி நடக்கத்தான் வேண்டும். பெற்றோர், ஆசிரியர் அறிவுரைகளைக் கடைப்பிடிக்க கடினமாக இருந்தாலும் அதைக் கேட்டு நடத்தல் வேண்டும். சிரியா நாட்டு தொழுநோயாளன நாமான் குணம் பெற இறைவாக்கினா் அறிவுரையைக் கேட்டு ஆத்திரமடைகிறான். தன் பணியாளர் சாந்தப்படுத்த இறுதியில் யோர்தான் நதியில் மூழ்கி எழ பூரண சுகம் பெறுகிறான். எண்ணற்ற திருத்தலங்களில் மக்கள் சில வரங்களைப் பெற பக்தியோடு எவ்வளவு கடினமான தியாகங்கள், ஒறுத்தல்கள் செய்கிறார்கள். கைகளில் மெழுகைப் பிடித்தவாகளாய், முழந்தாளிட்ட வண்ணம் நடந்து செல்லக் கூடியவர் எத்தனை பேர்! கடினம் என்று விலக்கிவிடாமல் தொடர்ந்து இறைவரம் பெறுகிறார்கள என்பது உண்மைதானே! கடவுள் காட்டும் வழிகள் கடினமானவை என்று விலக்கி தாறுமாறான வாழ்க்கை வாழ்கிறோமல்லவா! கடவுள் காட்டும நெறிப்படி நம் வாழ்க்கையை நடத்துவோம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## புலிகளில்...

தொடர்பில் கருணா கமகேக்கு மீண்டும் ஒரு செய்தியை அனுப்பியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கிழக்குப்பிராந்திய உட்பூசலகளில் தாம் ஈடுபடுவது தற்போது அவசியமல்ல என லஷ்மன் கதிர்காமரும், ஜனாதிபதியும் தீர்

## விழித்தெழுந்த...

காவலரணில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அநுராதபுரத்தில் உள்ள ஹெக்கிரா எனும் இடத்தைச் சேர்ந்த விஜித பண்டார (வயது-24) என்ற இராணுவச் சிப்பாயே பலியானவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மேற்படி இடத்திலுள்ள காவலரணில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் தூங்கிவிட்டதாகவும் அவரைப் பார்ப்பதற்காக வந்த விஜித பண்டார நித்திரையில் இருந்த சிப்பாயின் தலையில் நீரை ஊற்றியதாகவும் அப்போது விழித்தெழுந்த சிப்பாய் ஆத்திரம் மேலெழவே சரமாரியாகத் துப்பாககியால் சுட்டபோது விஜித பண்டார மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து காவலரணில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சிப்பாய் ஆயுதங்களுடன் தலைமறைவானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளதுடன், பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து சிப்பாயைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ச-19)

# தேர்தல் ஆணையருடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச்சந்திப்பு இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை.சேனாதிராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குச் சென்ற மாவை. சேனாதிராசா கிளிநொச்சியில் விடுதலைப புலிகளின் அரசியல் துறைத துணைப் பொறுப்பாளர் சுதாமாஸ்டரை நேற்றுச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ச)

மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கிழக்கைத் தமிழர் தாயகம் என ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கு பல்லின மக்களும் உள்ளார்கள் என்று கருணா ஆங்கில வாரஇதழுக்குப் பேட்டியளித்திருந்தார் என்றும் அச்செய்தி தெரிவித்துள்ளது. (ச-6)

## ஐ.தே. முன்னணியின் ஆட்சியிலேயே....

முககிய அமைச்சுக்களைக் கடந்த வருடம் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

முக்கியமான மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றுக்கொண்டதையடுத்தே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவது பொய்யான கூற்றாகும்.

இதில் உண்மை என்னவென்றால, அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு அள்ளி வீசி அவற்றை நிறைவேற்றாமல் போனமையே சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்கான காரணமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன அரசாங்கம் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழ் மிகவும் சக்திவாய்ந்த ஒலி, ஒளிபரப்பு சாதனங்களை புலிகளுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளது. இதன் பின்னரே, விடுதலைப் புலிகள் சமாதானப் பேசசுவார்த்தைகளில் இருந்து விலகிக்கொள்ளப்போவதாக அறிவித்தனர்.

நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் வகையில் அரசில் இடம்பெற்ற ஊழல்களை ஒழித்துக்கட்டவேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டதனாலேயே பாராளுமன்றைக் கலைத்தேன்.

ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ள 13ஆவது பொதுத் தேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சியமைத்தவுடன், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்தைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மேலும்...

னியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு தமிழகத்திற்கு புலம்பெயர்ந்த இவர்களை வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக்கூறிப் பேசாலைக்குக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அழைத்துவந்த குழுவினர் இவர்களைக் கொழும்பு, வததளை ஆகிய இடங்களில் தங்க வைத்தனர். இவர்களில் 12 பேர் நேற்றுமுன்தினம் தப்பிவந்தமையும் தெரிந்ததே. (ந-61,10)

# தேர்தல் கண்காணிப்பு மட்டக்களப்பில் தொடரும்

## ஐரோ. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் புலிகளிடையே உட்பூசல்கள் நிலவினாலும் ஐரோப்பிய ஒன்றியம் தனது தேர்தல் கண்காணிப்பு பணிகளில் தொடர்ந்து ஈடுபடும் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஜோன் குஷ்னகான் தெரிவித்தார். இப்பிரச்சினை ஏற்பட்ட பின்னர் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கிழக்கிலிருந்து வெளியேறிவிட்டனர்.

ஆயினும் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கிழக்கிற்குச் செல்வர் என்றும் தானும் வடக்கு கிழக்கு உட்பட நாடுமுழுவதும் செல்லவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதிகரித்து வரும் தேர்தல் வன்முறைகளை தடுக்கவென கொழும்பு, குருநாகல், யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, நுவரேலியா, வவுனியா, களுத்துறை, மற்றும் அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களிற்கு கண்காணிப்பாளர்கள் அனுப்பப்பட்டு விட்டனர் என குஷ்னகான் கூறினார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்காணிப்புப்பணிகள் 2பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன. அதில் ஒன்று அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணித்தல், மற்றையது வாக்களிப்பு முறையைப் பார்வையிடல்.

கடந்த தேர்தல்களின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் தமது கண்காணிப்புக் குழு கவனித்துக்கொள்ளும் என குஷ்னகான் மேலும் தெரிவித்தார். (ச-6)

## கருத்தரங்கு

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் நீர்வள பாதுகாப்பு கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக் கழக புவியியல் பேராசிரியர் எஸ். இராஜேஸவரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (தி-70)

பதவி வெற்றிடம்
கணனி பக்க அமைப்பாளர்கள்
அனுபவம் உள்ள ஆண் பெண் இருபாலாரும்.
விளம்பர முகவர்
நிறுவனத்தில் இணைந்து வெளிக்களத்தில் பணியாற்றுதல்
வயது 25 முதல் 50 வரை
தகுதியானவர்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 18.03.2004 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.
வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
நிர்வாக உத்தியோகத்தர்

தன் நலம் கருதாத தனிப் பெருந்தலைவன்...சங்கரி



வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்ட வாக்காளர்களே!

☼ மக்களால் தெரிவு செய்யப்பட்டால் அன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கமாட்டேன் எனக் கூறிய பெருந்தகை

ஆனந்தசங்கரி

☼ என் இறுதி மூச்சு உள்ளவரை பெருந் தலைவர்களால் உருவாக்கிப் பாதுகாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை அழியவிடாது பாதுகாப்பேன் எனத் தர்மயுத்தம் நடத்தும் நிகரில்லாத் தலைவன்

ஆனந்தசங்கரி



வைத்தியகலாநிதி
ந.கிருஷ்ணராசா J.P

தலைவன் நோக்கம் நிறைவேற, தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்திட

வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

சுயேச்சைக் குழு 1

வெல்ல வைத்து சேவையைப் பெறுவதே எம்பணி

சுன்னாகம்-மக்கள்.

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டார்கள் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம்.
(சி-7431)